| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | எஸ்.எம்.எஸ்நிலவ்பா |

தீர்மானம் சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏகமனதாக அனுமதிக்கப்பட்டது.

**தீர்மானம் - 04/58/16**
சபையின் நிதி மூலம் அம்பாரை 7ம் வீதியில் அமைந்துள்ள பாலத்தினை புனர் நிர்மாணம் செய்வதற்கான தீர்மானம்.

பிரேரித்தவர் : கௌரவ தவிசாளர் ஏ.எம்.முஹம்மட் நௌசாட்
ஆமோதித்தவர் : கௌரவ உறுப்பினர் எஸ்.நளீம்

தீர்மானம் சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏகமனதாக அனுமதிக்கப்பட்டது.

**தீர்மானம் - 04/58/17**
உடங்கா – 02ம் பிரிவில் தென்கிழக்கு பல்கலைக்கழக விஞ்ஞான பீடத்திற்கு பின்னால் சிறுவர் பூங்காவிற்கான ஒதுக்கப்பட்ட காணியினை சுற்றி வேலி அமைப்பதற்கும் தேங்கி நிற்கும்நீரை வெளியேற்றுவதற்கு நடவடிக்கை எடுப்பதற்குமான தீர்மானம்

பிரேரித்தவர் : கௌரவ தவிசாளர் ஏ.எம்.முஹம்மட் நௌசாட்
ஆமோதித்தவர் : கௌரவ உறுப்பினர் ஏ.சீ.எம்.சஹீல்

தீர்மானம் சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏகமனதாக அனுமதிக்கப்பட்டது.

**தீர்மானம் - 04/58/18**
உடங்கா – 02ம் பிரிவில் அமைந்துள்ள சமீட்புர 20 வீட்டுத்திட்டத்தில் அமைந்துள்ள வீதியினை திருத்தம் செய்வதற்கான தீர்மானம்.

பிரேரித்தவர் : கௌரவ தவிசாளர் ஏ.எம்.முஹம்மட் நௌசாட்
ஆமோதித்தவர் : கௌரவ உறுப்பினர் ஏ.சீ.எம்.சஹீல்

தீர்மானம் சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏகமனதாக அனுமதிக்கப்பட்டது.

**கௌரவ உறுப்பினர் ஏ.அச்சி முஹம்மட் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, அந்தப் பாலத்தை முழுமையாக உடைத்து செய்ய இயலாது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
அதை உடைத்து செய்வது இல்லை. திருத்தம் செய்வது.

**கௌரவ உறுப்பினர் எஸ்.நளீம் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, செய்யப்பட வேண்டிய வேலைகளுக்கான தீர்மானங்கள் எடுக்கப்பட்டிருக்கின்றது. ஆகவே என்னுடைய வட்டாரத்தில் உள்ள வைத்தியசாலை மூன்றாம் குறுக்கு வீதிக்கு கல்வெட்டு ஒன்று அமைக்க வேண்டும் என்று ஏறத்தாழ நான்கு அமர்வுகளில் தீர்மானம் எடுக்கப்பட்டு மதிப்பீட்டு அறிக்கையும் செய்யப்பட்டு, அந்த வேலை செய்யப்பட இருக்கின்ற கட்டத்தில் இருக்கின்ற போது எங்களுடைய கௌரவ உறுப்பினர் அஸ்வர் அவர்களால் நான் வேறு திட்டத்தின் கீழ் இந்த வேலையை செய்கின்றேன் என்று கூறி அந்த வேலையை செய்ய விடாமலாக்கப்பட்டு இன்று அந்த வேலை செய்யப்படாமல் பாரிய பிரச்சினையாக இருக்கின்றது.

அதேபோன்று கௌரவ தவிசாளர் அவர்களே, டிரான்ஸ்பார்மர் வீதியையும் எஸ் வாய்க்கால் வீதியும் சந்திக்கின்ற கல்வெட்டு உடைந்து சேதமாகி மிகவும் மோசமான நிலைமையில் உள்ளது. ஆகவே அந்த கல்வெட்டையும் செய்ய வேண்டும். ஆலமரத்து வீதி ஏறத்தாழ இந்த சபைக்கு வந்து நான்கு வருடங்களாக 5 சபை அமர்வுகளில் தீர்மானம் எடுக்கப்பட்ட வேலை. அந்த வேலையையும் எமது கௌரவ உறுப்பினர் அதற்கு நான் வடிகான் அமைத்து அந்த கல்வெட்டுகளை அமைக்கின்றேன் என்று கூறி இந்த சபையில் நிதியில்லை வேறு ஏதாவது பங்களிப்பின் ஊடாக இதை செய்வோம் என்று கூறி, இந்த வேலைகளை தடுத்து நிறுத்தி விட்டு உண்மையாக கவலையான விடயம்

கௌரவ உறுப்பினரின் வட்டாரத்திற்கு ஒரு தேவை என்ற போது சபை நிதியை கொண்டு அந்த வேலையை செய்து கொண்டிருக்கின்றார்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
சபையிலே தீர்மானம் எடுக்கப்பட்டு அது நடைமுறைப்படுத்தாததற்கு காரணம் அந்த நேரத்தில் ஒரு நியாயம் இருந்தது. அதை விட்டு தீர்மானம் எடுக்கப்பட்டிருக்கின்ற படியினால் அதை நிறைவேற்றுவதற்கு நமக்கு பணம் இருந்தால் நிச்சயமாக அது இந்த காலத்திற்குள் செய்வோம்.

**கௌரவ உப தவிசாளர் ஏ.அச்சி முஹம்மட் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, இதில் வைத்தியசாலை வீதியை முன்னுரிமை படுத்த வேண்டும்.

**கௌரவ உறுப்பினர் எஸ்.நளீம் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, நான் யாருடைய அபிவிருத்தியையும் தடுப்பதாகவும் இல்லை குந்தகம் விளைவிப்பதாகவும் இல்லை. ஆனால் உண்மையாக 2018ம் ஆண்டு தீர்மானம் எடுக்கப்பட்ட நிலையில் இந்த வேலையை செய்திருந்தால் மூன்றரை லட்சத்துக்குள் முடித்திருக்கலாம். கௌரவ தவிசாளர் அவர்களே கௌரவ உப தவிசாளர் அவர்களின் தலைமையில் நீங்கள் குறிப்பிட்ட குழுவின் தீர்மானத்தின் படி இன்று அந்த வேலையை செய்வதற்கு 20 லட்சம் ரூபாய் தேவை இதுதான் நிலைமை.

**கௌரவ உறுப்பினர் ஐ.எல்.எம்.மாஹிர் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, கல்லறைச்சல் சிறுவர் பூங்காவிற்கு அருகிலே இருக்கின்ற பகுதியில் மழை காலங்களில் தண்ணீர் அந்த நிலத்திற்குள் செல்வதால் அதை தடுப்பதற்காக எழுத்து மூலம் விண்ணப்பித்து அதற்குரிய வேலைகள் நடந்திருக்கின்றது அதை துரிதப்படுத்தினால் நல்லது என்று கேட்டுக்கொள்கின்றேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
கௌரவ உறுப்பினர்களிடம் பணிவாக கேட்டுக் கொள்வது என்னவென்றால் எதிர்காலங்களில் நமது அபிவிருத்தி வேலைகள் என்று வரும்போது மக்கள் பங்களிப்பு இல்லாமல் நாம் ஒரு வேலையை முன்மொழிவோமானால் அதற்கு முன்னுரிமை வழங்குவதில் ஒரு பிரச்சினை உருவாகும். அதற்கு முன் உதாரணமாக கௌரவ உறுப்பினர் மாஹிர் அவர்கள் சொன்ன வேலையில் மக்கள் பங்களிப்பும் வருகின்றது. மக்கள் பங்களிப்பு இருக்கின்ற நேரம் அவர்களுக்கும் ஒரு பொறுப்பு இருக்கும். நாம் இதை சரியாக செய்ய வேண்டும் என்று, இது தமிழ் பகுதிகளிலும் தமிழ் கிராமங்கள், சிங்கள கிராமங்கள் பெரும்பாலாக NGO வேலைகள் நடக்கின்றது. NGO கூறுகின்றார்கள் Clearence வேலைகள் அனைத்தையும் நீங்கள் செய்ய வேண்டும். நாங்கள் பொருட்களை கொள்வனவு செய்து தருகின்றோம். சமூகத்தில் இருக்கின்ற மேசனை எடுத்து செய்யுங்கள். அது மக்கள் பங்களிப்போடு செய்த வேலையாக வரும். கொந்தராத்து கொடுத்து செய்யப்போனோமானால் எதிர்காலத்தில் நடைமுறைக்கு சாத்தியம் இல்லை. PSDG இல் இந்தப் பெரிய சபைக்கு 76000 சனத்தொகை 36 கிராமங்கள் கொண்ட சபைக்கு 1.6 மில்லியன் பாதைகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது. இதில் ஒன்றும் செய்ய இயலாது. இதுதான் யதார்த்தம். அரசாங்கத்தினாலேயே இவ்வளவுதான் தரலாம் என்றால் இந்த சபையில் இருந்து எப்படி எடுப்பது. நாம் கட்டுப்பாட்டோடும் ஒற்றுமையாகவும் செயற்பட்டதனால்தான் நாம் பயம் இல்லாமல் இருக்கின்றோம். நாம் சென்றாலும் இந்த சபை இன்னும் 04 மாதத்திற்கு நடக்கும் என்று தலை நிமிர்ந்து நடக்கலாம்.

**கௌரவ உறுப்பினர் ஏ.யூசுப் லெப்பை அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, கடந்த வருடத்திற்கான செய்ய வேண்டிய வேலைகள் பட்டியல் இடப்பட்டிருக்கின்றது. எமது கடந்த சபை அமர்வில் கூட ஹிஜ்ரா முதலாம் வீதி முடிவடைகின்ற இடத்தில் வடிகானால் ஏற்பட்ட சிதைவு அந்தப் பாதிப்பு தொடர்ந்து கொண்டிருக்கின்றது. அந்தப் பாதைகள் பாவிக்க முடியாத அளவுக்கு நான் நினைக்கின்றேன் அடுத்த மாரி காலத்தில் வந்துவிடும். அதை நான் பல தடவை இந்த சபையில் கூறியிருக்கின்றேன். கடந்த சபையிலும் நான் அதை

ஞாபகப்படுத்தினேன். நீங்களும் அதற்கு உற்சாகம் அளித்தீர்கள். செய்ய வேண்டிய வேலைகளில் அதையும் கட்டாயமாக சேர்த்துக் கொள்ள வேண்டும். தொடர்ச்சியாக அதை விடுவதால் மேலதிக செலவீனங்களை சபைக்கு ஏற்படுத்தும் என்பதுதான் எனது தயவான கருத்து. அந்தப் பாதை 80 இலட்சம் ரூபா செலவில் நல்லாட்சி அரசாங்கத்தின் மூலமாக எத்தனையோ பேர் இருந்தும் கௌரவ உறுப்பினர் என்ற அடிப்படையில் நான் அதை கொண்டு வந்து சேர்த்து கஷ்டப்பட்டது எனக்குத் தான் தெரியும். அதில் ஏற்படுத்தப்படுகின்ற சிதைவு எனது மனதில் கூடுதலாக புண்படுத்துகின்றது. ஆகவே 4 வருடங்களை கடந்துவிட்டது. கௌரவமான சபையில் நான் இருப்பதனால் அதையாவது எனக்கு செய்து தர வேண்டும் என்று எதிர்பார்க்கின்றேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
கௌரவ உறுப்பினர் அவர்களே, அந்த வேலை நாம் செய்யாமல் விட்டதற்கு ஒரே ஒரு காரணம் I Road Project இன் கீழ் வருவதனால்தான். அந்தம் முடிவடையாததினால் அதனை முன்னுரிமைப்படுத்தவில்லை. I Road Project இன் கீழ் கட்டாயம் அதனை செய்ய வேண்டும். I Road Project இனிமேல் நடைபெறமாட்டாது என்றால் அதை செய்யலாம் இல்லாவிட்டால் அந்தப் பிரச்சினை வரும்.

**கௌரவ உறுப்பினர் ஏ.சீ.எம்.சஹீல் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, செய்ய வேண்டிய வேலை திட்டத்தில் அம்பாறை 12 வடிகான் மிக நீண்ட காலமாக எமது சபை ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் இருந்து இதுவரைக்கும் நாங்கள் பல்வேறு வகையில் சுத்தம் செய்திருக்கின்றோம். ஆனால் கடைசி காலகட்டத்திலாவது அந்த வடிகானை துப்புரவு செய்ய வேண்டும். அது மாத்திரமல்லாமல் அதன் சில் உயர்ந்திருப்பதாகவும் கடந்த அமர்வில் கூட பேசி இருந்தேன். அதற்கு அந்த நிதியை ஒதுக்கி ஏதாவது தீர்வு ஒன்று எடுக்க வேண்டும் என்று இந்த சபையை கேட்டுக் கொள்கின்றேன்.

**கௌரவ உப தவிசாளர் ஏ.அச்சி முஹம்மட் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, கௌரவ உறுப்பினர் சஹீல் அவர்கள் கூறிய வடிகான் உண்மையான விடயம் என்னவென்றால் அவ்விடத்தில் ஒரு அயலூர் ஒருவர் திருமணம் முடித்திருக்கின்றார். எந்த நேரமும் தண்ணீர்தான் நிற்கின்றது. அந்தத் தண்ணீர் நிற்காமல் ஓடுவதற்குரிய வேலை செய்ய வேண்டும்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
அம்பாறை வீதியில் இருக்கின்ற RDA வடிகான் இந்த வடிகானை விட உயரம் அதனால்தான் தண்ணீர் நிற்கின்றது. இந்த வடிகானை உயர்த்த வேண்டும் இல்லாவிட்டால் தண்ணீர் வடிய தொடங்கும். அதை உடைத்து செய்யவும் இயலாது.

**கௌரவ உறுப்பினர் ஏ.சீ.எம்.சஹீல் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, நடுவில் இருக்கின்ற கல்வெட்டும் பணிந்து தான் இருக்கின்றது. அதனால் நமக்கு சுத்தம் செய்யவும் இயலாமல் இருக்கின்றது. எனவே அதை மண் இருக்கின்ற அளவுக்காவது கொங்கிரீட் இட வேண்டும் என்று தீர்மானம் எடுக்க வேண்டும்.

**கௌரவ உறுப்பினர் யூ.எல்.அஸ்பர் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, எங்களுடைய கௌரவ உறுப்பினர் நளீம் அவர்கள் அவருடைய ஆதங்கத்தை பேசி அதற்குரிய நியாயத்தையும் நீங்கள் பேசியிருந்தீர்கள். கௌரவ தவிசாளர் அவர்களே, நான் எனது வட்டார ரீதியான சேவைகளை செய்யவில்லை. சம்மாந்துறைக்கு என்றுதான் நான் சேவைகளை செய்தவன். ஆனால் இன்னும் 85 கோடி ரூபா வேலைகள் கைதொடாமல் இருக்கின்றது நாட்டில் ஏற்பட்ட பொருளாதார சூழ்நிலை காரணமாக இந்த வேலைகள் செய்யப்படவில்லை. என்னை குற்றம் சாட்டுவது பிழை என நினைக்கின்றேன். நான் அவரின் பிரதேசம் எனது பிரதேசம் என்று பார்க்கவில்லை. எனது ஊர் சம்மாந்துறை என்றுதான் பார்த்தேன். அத்துடன் கௌரவ தவிசாளர் அவர்களே, ஜமாலியா பாடசாலை பற்றி பேசுவதற்கு நான் உங்களிடம் அனுமதி கோரி இருந்தேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
பாடசாலை விடயங்களில் பிரதேச சபையின் சட்டத்தின் படி நாம் ஒரு ஆலோசனை வழங்கும் இடத்தில் தான் இருக்கின்றோமே தவிர எந்த அழுத்தமோ, முடிவுகளோ எடுக்கக்கூடிய நிலையில் இல்லை. அப்படி இருந்தும் ஒரு பொது விடயம் என்றபடியினாலும் இதில் நாம் கவனமாக இருக்க வேண்டியது இந்த விடயத்தை பற்றி நீதிமன்றத்தில் பல வழக்குகள் இருக்கின்றது. அந்த வழக்குகள் சம்பந்தப்பட்ட விடயங்கள் இந்த சபையில் பேசுவது பொருத்தமா? இல்லையா? என்பதை கௌரவ உறுப்பினர் முஸ்தபா அவர்கள் தெளிவுபடுத்த வேண்டும். பொதுவான விடயங்களை கதைக்கலாம் ஆனால் வழக்கு சம்மந்தப்பட்ட விடயங்களில் கவனமாக இருக்க வேண்டும். அந்த வட்டாரத்தில் நானும் அங்கத்தவன். மற்றய உறுப்பினர்களும் இருக்கின்றார்கள்.

இந்த விடயம் பேசப்பட வேண்டிய விடயம் அதில் மாற்றுக் கருத்துக்கள் இல்லை. ஆனால் பேசும்போது கவனமாக வழக்கு சம்பந்தமான விடயங்களை நாம் ஹன்சார்ட் இல் பதிவிடுவது பிழையாக இருக்கும். பேசலாம் ஆனால் பதிவிடுவது பிழையாக இருக்கும்.

**கௌரவ உறுப்பினர் யூ.எல்.அஸ்பர் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, நான் வழக்கு சம்பந்தமாக பேசவில்லை நியாயம், அநியாயம் பற்றி பேச வேண்டும். இந்தப் பாடசாலையில் ஏற்பட்ட பிணக்குகள் இரண்டு சாராரையும் நாம் முன்னின்று அழைத்து ஒரு சமரசம் பண்ணுவதற்கான ஏற்பாடுதான் இது. இதை மக்களுக்கான சபையில் கௌரவ உறுப்பினர்களுக்கு மத்தியில் இதைப் பற்றி பேசி எத்தி வையுங்கள் என்று சொல்லி என்னிடம் வேண்டி இருக்கின்றார்கள். அது சம்பந்தமாக நான் பேச வேண்டும். வழக்கு சம்மந்தமான விடயங்களை பிறகு கதைப்போம்.

கௌரவ தவிசாளர் அவர்களே, கடந்த 1 ½ வருட காலங்களாக ஜமாலியா பாடசாலையின் அதிபருக்கும், முன்னாள் பாடசாலை அபிவிருத்தி குழு, செயலாளர் உட்பட உறுப்பினர்களாகிய பெற்றோர்களுக்கிடையில் இடையில் வாக்குவாதம் பிணக்குகள் ஏற்பட்டிருக்கின்றது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
கௌரவ உறுப்பினர் முஸ்தபா அவர்களே, வழக்குகளுக்கு பாதகமாக ஏதாவது இருந்தால் அதை கூட்டறிக்கையில் இருந்து அகற்றலாம். இதில் இரண்டு பக்கம் பார்க்க வேண்டும். இதை கூட்டறிக்கையில் பதிவது என்றால் வழக்கிற்கு பாதகமான எதையும் கூட்டறிக்கையில் பதிய இயலாது. அதை கவனத்தில் கொள்ள வேண்டும்.

**கௌரவ உறுப்பினர் எஸ்.எம்.எம்.முஸ்தபா அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, வழக்கு ஒன்று நடைமுறையில் இருக்கின்ற போது அது சம்பந்தமாக கருத்தாடல் செய்வதற்கு யாருக்குமே உரிமை இல்லை. பாராளுமன்றத்தில் கூட பெண்டிங் கேசஸ் அது சம்மந்தமாக கதைப்பதற்கான உரையாடல் குறைவு. வழக்கு ஒன்று நடைபெற்று கொண்டிருக்கும் போது அது சம்பந்தமாக கருத்தாடல் செய்ய முடியாது. கௌரவ உறுப்பினர் அஸ்பர் அவர்கள் கூறுகின்ற வழக்கு நான் நினைக்கின்றேன் றிஸ்விகான் சகோதரர் ஒரு குழுவினரும் சேர்ந்து இரண்டு றிட் வழக்குகள் செய்திருக்கின்றார்கள், அதிபருக்கு எதிராகவும் பாடசாலை அபிவிருத்தி குழுவுக்கு எதிராகவும் இருக்கின்ற வழக்குகள். இது பெண்டிங் வழக்குகள். நான் நினைக்கின்றேன் கடந்த ஒரு வருடங்களாக கல்முனை மேல் நீதிமன்றத்தில் றிட் மனு வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு அதை நிலுவையில் உள்ள வழக்காக இருக்கின்றது. றிப் வழக்குகளாக இருந்தாலும் கூட நீதிமன்றத்தில் இருக்கின்ற வழக்குகள் சம்பந்தமாக கருத்துரையாடல் செய்வது என்பது எந்தளவுக்கு ஆரோக்கியமான விடயம் என்பதை கவனத்தில் கொள்ள வேண்டியதாக இருக்கும். கௌரவ நீதிபதியின் தீர்ப்புக்காக விடப்பட்டிருக்கின்ற விடயமாக இருப்பதினால் அதனை கவனத்தில் கொள்ள வேண்டியதாக இருக்கும்.

கடந்த இரண்டு அல்லது மூன்று சபை அமர்வுகளுக்கு முந்தி ஒரு சந்தர்ப்பத்தில் நாங்கள் இந்த சபைக்கு ஒரு விடயத்தை கொண்டு வருகின்ற போது பிரத்தியோக குழுக்கள் சம்பந்தப்பட்ட விடயங்களின் போது முதலாவது அந்த குழுக்களை நாம் சந்திப்போம். அந்தக் குழுக்கள் நாங்கள் மத்தியஸ்தம் செய்து அதை ஏற்றுக் கொள்ள தயாரா என்ற நிலமை கிடைக்கப்பெற்றால் மாத்திரம் தான் நாங்கள் அதில் காலத்தை வீனடிக்கச் செய்யலாம். உதாரணமாக Tower அமைக்கின்ற விடயம் சம்மந்தமாக, பாதை பிரச்சினை சம்பந்தமாக கௌரவ உபதவிசாளர் அவர்களின் தலைமையில் மூன்று வீதிகளுக்குச் சென்று நாங்கள் தீர்மானங்கள் கொடுத்தோம். HNB வங்கிக்கு பக்கத்தில் இருக்கின்ற பாதை சம்பந்தமாக நாங்கள் ஒரு பிரம்மாண்டமான கலந்துரையாடல் ஒன்று இருத்திறத்தார்களை எடுத்து நடாத்தினோம். முடிவு ஒன்றுமே இல்லை. எனவே, இரு திறத்தார்கள் இது சபையால் வழங்கப்படுகின்ற தீர்மானங்கள் ஏற்றுக்கொள்வோம் என்ற சொல்லி அந்த பிரச்சினைகளோடு சம்பந்தப்பட்ட இரு திரத்தவர்களும் எங்களுக்கு ஒரு சம்மதம் தெரிவித்து அதை நியாய சபையால் செயற்படுகின்ற என்றால் அது ஒரு நடைமுறைச் சாத்தியமான விடயமாக இருக்கும். மற்றும்படி அது நாம் கலந்தாலோசிக்கப்பட வேண்டிய விடயமாக இருக்குமே தவிர தீர்மானமாக எடுக்கக்கூடிய விடயமாக இருக்காது. வழக்கு ஒன்று நிலுவையில் இருக்கும் போது அந்தக் கலந்துரையாடல்கள் தவிர்க்கப்பட வேண்டியது சால சிறந்தது.

**கௌரவ உறுப்பினர் யூ.எல்.எல்.அஸ்பர் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருப்பது முதலாவது வழக்கு அதிபரை இடமாற்றம் செய்ய வேண்டும் என்றும் இரண்டாவது வழக்கு SDC இன் முடிவுக் காலம் 2023 ஆம் ஆண்டு 03ம் மாதம் வரைக்கும் இருக்கத்தக்கதாக காலம் முடிவடைவதற்கு முன்பதாக எங்களது SDC இனை கலைத்திருக்கின்றார்கள் என்பதுதான் இரண்டாவது வழக்கு. வேறு ஏதும் கொலைக் குற்றங்களோ போதைப் பொருள் விடயம் சம்மந்தமாகவோ இல்லை. எங்களது கௌரவ உறுப்பினர்கள் மத்தியில் இந்த விடயம் சம்மந்தமாக தெளிவுபடுத்தப்படல் வேண்டும் என்ற நோக்கத்திற்காகத்தான். இதை ஹன்சார்ட் இல் பதிவு செய்தாலும் சரி பதிவு செய்யாவிட்டாலும் பராவாயில்லை. கௌரவ தவிசாளர் அவர்களே, 2021 ஆம் ஆண்டு ஜமாலியா பாடசாலைக்கு Renovation கட்டிடப் பழுதுபார்த்தல் தலைப்பின் அடிப்படையில் 03 கட்டமாக நிதி ஒதுக்கப்பட்டிருக்கின்றது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
இந்த விடயம் சம்மந்தமாக வழக்கு இருக்கின்றதா?

**கௌரவ உறுப்பினர் யூ.எல்.எல்.அஸ்பர் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, இது சம்மந்தமாக வழக்கு இல்லை. ஊழல் சம்மந்தமாக அதிபர் இப்படி நடந்திருக்கின்றார் என்று ZDE, மற்றும் PDE அவர்களுக்கு கடிதம் அனுப்பியும் இவர்கள் நடவடிக்கை எடுக்கவில்லை. இது தான் முதல் காரணம். SDC உறுப்பினர்களுக்கு தெரியாமல் பாடசாலைக்குள் கல், மண், கட்டிட தளபாடங்கள் பறிக்கப்படுகின்றது என்று சொன்னால் அந்த கல், மண் எப்படி வந்தது. என்ன கட்டிடம் SDC இற்கு வந்ததா அல்லது வேறு ஏதாவதா? என்று அதிபரிடம் சென்று வினவிய போது அதிபர் கூறியிருக்கின்றார் அது SDC இற்கும் நமக்கும் சம்மந்தம் இல்லை. அது வலயக்கல்வி அலுவலகத்தினால் எமக்கு ஒரு கட்டிடம் அன்பளிப்பாக செய்து தரப்போகின்றார்கள் என்று பதில் கொடுக்கப்பட்டிருக்கின்றது. இவர்களது விருப்பத்திற்கு ஏற்றவாறு முதலாவது கட்டம், இரண்டாவது கட்டம், மூன்றாவது கட்டம் என்று புதுக் கட்டிடம் நிர்மானிக்கப்பட்டு முடித்த பிறகு அந்த கட்டடத்திற்கான பணத்தை Release பண்ணுவதற்காக SDC இடம் நாடி இருக்கின்றார்கள்.

உதாரணமாக நான் கேட்கின்ற விடயம் என்னவென்றால் SDC செயலாளர் கூட்டறிக்கை எழுத வேண்டிய விடயத்தை அதிபர் அவருடைய விருப்பத்திற்கு தன் கையால் கூட்டறிக்கையை எழுதி SDC செயலாளரிடம் ஒப்பமிடுங்கள் என்றால் எவரும் ஒப்பம் வைக்க மாட்டார்கள். நானும் ஒப்பமிடமாட்டேன். அதே போன்றுதான் எனக்கு இது தெரியாத விடயம் இது சம்மந்தமாக நான் எந்த

ஒப்பந்தமும் பண்ணவில்லை. இதற்கு நாங்கள் ஒப்பமிடமாட்டோம் என்றது பிழையா? இதனால்தான் SDC உறுப்பினர்களுக்கும் அதிபருக்குமிடையில் வாக்குவாதம் வந்த காரணத்தினால் இவர்கள் ZDE மற்றும் PDE இற்கு முறைப்பாடு செய்திருக்கின்றார்கள். அதற்கு PDE சொல்லியிருக்கின்றார் முதலில் அதிபரை தற்காலிகமாக இடமாற்றம் செய்யுங்கள். இரண்டாவதாக SDC இனை கலைத்து புதிய நிர்வாகம் தெரிவு செய்யுங்கள் என்று. SDC ஐ கலைத்து புதிய நிர்வாகம் செய்திருக்கின்றார்களே தவிர அதிபரை இன்னும் இடமாற்றம் செய்யவில்லை. குறித்த பெற்றோர்களின் பிள்ளைகளான மாணவர்கள் பாடசாலைக்கு செல்கின்ற நேரத்தில் காலைக் கூட்டத்தில் வைத்து மற்ற ஏனைய மாணவர்களுக்கு மத்தியில் ஒரு குடம் பாலுக்குள் ஒரு துளி விஷம் இந்தப் பிள்ளைகளின் பெற்றோர்கள் என்றெல்லாம் அவமானப்படுத்துவதும், பாடசாலை விடுமுறை தினங்களில் Seminar என்று அழைத்து சிரமதானம் செய்து குறிப்பிட்ட பிள்ளைகளை மலைக்கு மேல் ஏற்றி கஸ்டப்படுத்துகின்ற தன்மைகள், குறித்த மாணவர்களை ஏனைய மாணவர்களோடு பழகக்கூடாது என்ற பிரிவனைவாதங்களை அந்த அதிபர் நடைமுறைப்படுத்தி வருகின்ற காரணத்தினால் குறித்த மாணவர்கள் உளவியல் ரீதியாக பாதிக்கப்பட்டிருக்கின்றார்கள்.

எனவே தான் இவைகள் எல்லாவற்றையும் உற்று நோக்கிவிட்டு பெற்றோர்கள் ஒரு முறைப்பாடு செய்திருக்கின்றார்கள். ZDE இடம் அதிபர் செய்த பிழைகள், குற்றச்சாட்டுகள் காரணத்தினால் 09 பிள்ளைகளை வேறு ஒரு பாடசாலைக்கு மாற்றப்போகின்றோம். இதற்கு என்ன பதில் சொல்லப்போகின்றார் என்ற ஒப்பினைக்காகத்தான். 200 மீற்றர் தூரத்தில் இருக்கின்ற பாடசாலையை விட்டு கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள பாடசாலைக்கு போக வேண்டும் என்றில்லை. மாறாக அதிபருக்கு என்ன நடவடிக்கை எடுக்கின்றார்கள். பெற்றோர் மாணவர்களின் நலனைப் பற்றி எப்படி சிந்திக்கின்றார்கள் என்று கவனிப்பதற்காகத்தான் ஒரு கடிதம் கொடுக்கப்பட்டிருக்கின்றது.

மாறாக அந்தக் கடிதத்திற்கு பகரமாக அதிபர் தன் கைப்பட ஒரு கடிதம் எழுதியிருக்கின்றார் அதாவது விடுகைப் பத்திரம் பெற்றுக் கொள்ளல் பெற்றோரின் விலாசத்தை போட்டு மேற்படி பெயருடைய நான் ஜமாலியா வித்தியாலயத்தில் கல்வி கற்றுக் கொண்டிருக்கும் பின்வரும் பெயருடைய எனது மகளை எனது சுய விருப்பத்தின் பெயரில் அவர்களின் விடுகைப் பத்திரத்தை வலயக்கல்வி பணிப்பாளர் மற்றும் பிரதி அதிபர், ஆசிரியர் முன்னிலையில் 14.12.2022 ஆந் திகதிய இன்று பெற்றுக் கொண்டேன் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அதில் அதிபரைப் பற்றி குறிப்பிடப்படவில்லை. அதிபர் தான் இம் மடலை எழுதுகின்றார். ஆனால் உப அதிபர் வலயக்கல்விப் பணிப்பாளர் முன்னிலையில் பெற்றுக்கொண்டேன் என்று எழுதப்பட்டிருக்கின்றது. பெற்றோர்கள் ஏற்கனவே கொடுத்த முறைப்பாடு என்னவெனில் பாடசாலை விடுகைப்பத்திரம் வழங்கக் கோரல். மேற்படி பெயருடைய நான் அறியத்தருவது என்னவென்றால் ஜமாலியா வித்தியாலயத்தில் தரம் - 06 இல் கல்வி கற்கும் எனது மகளை விலக்கிக் கொள்வதற்கு தீர்மானித்துள்ளேன். ஏனெனில் குறித்த குற்றச்சாட்டை சுட்டிக்காட்டித்தான் அதிபர் ஊழல் செய்த காரணத்தினால் எங்களது பிள்ளைகளை வேறொரு பாடசாலைக்கு கொண்டு போகப்போகின்றோம். எங்களது பிள்ளைகள் பழிவாங்கப்படுகின்றது. எங்கள் மீதுள்ள கோபங்களை பிள்ளைகளின் மீது திணிக்கின்றார்கள் என்று அந்த கடிதத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
அது யாருக்கு எழுதப்பட்டிருக்கின்றது.

**கௌரவ உறுப்பினர் யூ.எல்.அஸ்பர் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, அதிபருக்கு எழுதப்பட்டிருக்கின்றது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
அதிபருக்கு எழுதினால் நீங்கள் இப்படி செய்ததனால் எங்களது பிள்ளைகளை மாற்றப் போகின்றோம் விடுகைப் பத்திரம் தாங்கள் என்றால் கொடுக்கமாட்டார்கள்.

**கௌரவ உறுப்பினர் யூ.எல்.அஸ்பர் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, இந்த நாட்டில் பரவலாக பேசப்படுவது மாணவர்கள் போதைப் பொருளுக்கு அடிமைப்பட்டிருக்கின்றார்கள் என்று பேசப்பட்டுக்கொண்டு வருகின்றது. இது காரணமாக

அதிபர் எங்கள் மீதுள்ள கோபத்தின் காரணமாக எங்களது பிள்ளைகளின் புத்தகப் பைக்குள் ஏதாவது போதைப்பொருள்களை வைத்து பழிவாங்குவதற்காக பிடித்துக் கொடுத்தால் இதை தாங்க முடியுமா என்ற பயம். ஒரு பெண் அதிபராக இருந்தாலும் சரி, ஜனாதிபதியாக இருந்தாலும் சரி பெண் பெண்தான். கௌரவ தவிசாளர் அவர்களே, பெற்றோர்களுக்கு மத்தியில் பாலியல் துஸ்பிரயோகத்திற்கு கீழ் ஒரு அச்சுறுத்தல் செய்திருக்கின்றார் அதிபர். இப்படியான அதிபர் இந்த விடயமாக போதைப்பொருளை வைத்து பிடித்துக் கொடுக்க மாட்டார் என்பதற்கு என்ன உத்தரவாதம். இதனால் எங்களுக்கு நல்ல முடிவு வரும் வரைக்கும் பாடசாலையை விட்டு நிறுத்துகின்றோம் என்று நிறுத்தி வைத்திருக்கின்றார்கள். எங்களது ஊரில் பெரியவர்கள் இருக்கின்றார்கள், பள்ளிவாசல் நிர்வாகங்கள் இருக்கின்றது. ZDE இடமும் நேற்று இது சம்மந்தமாக நான் சென்று கதைத்தேன். ZDE ஏற்றுக் கொள்கின்றார். நீங்கள் சொல்கின்ற அனைத்தும் உண்மைதான். நான் ஒரு அமீராக இருந்தால் அதற்குரிய தீர்ப்பு வித்தியாசமாக தருவேன். நான் ZDE என்னால் ஒன்றும் செய்ய இயலாத நிலமை. அதிபரையும் அழைத்து பாதிக்கப்பட்ட பெற்றோர்களையும் அழைத்து ஒரு சமரசத்திற்கு வருவோம் என்று கூறினார்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
முதன் முதலாக கௌரவ உப தவிசாளர் அவர் வலயக் கல்வி அலுவலகத்தில் இருந்தவர் அவரும் நானும் ZDE ஐ சந்திக்கின்றோம். இதன் பின்னனியை எடுத்துவிட்டு அதற்கு அப்பால் செல்ல இயலும் என்றால் SDC ஐ அழைத்து அவர்களிடம் கதைத்து அதன் பின்னர் அதிபருடன் கதைப்போம்.

**கௌரவ உறுப்பினர் யூ.எல்.அஸ்பர் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, தற்போதய நிலைக்கு அதிபரை தற்காலிகமாக இடமாற்றப்பட வேண்டும்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
நான் தவிசாளர் என்ற ரீதியிலும், உப தவிசாளர் வலயக்கல்வி அலுவலகத்தில் இருந்தபடியினாலும், கௌரவ உறுப்பினர் முஸ்தபா அவர்களை வீரமுனை வட்டாரத்திற்குரியவர் என்ற ரீதியிலும் சட்டத்தரணி என்ற ரீதியிலும் நாங்கள் மூன்று பேரும் முதற்கட்டமாக சென்று பேசுவோம்.

**கௌரவ உறுப்பினர் யூ.எல்.அஸ்பர் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, நியாயமான தீர்ப்பை வழங்கி அந்தப் பிள்ளைகள் நிம்மதியாக அந்த பாடசாலையில் படிக்க வேண்டும். குறிப்பிட்ட தூரத்தில் இருக்கின்ற பிள்ளைகள் கிலோ மீற்றருக்கு அப்பால் செல்ல முடியாது.

**கௌரவ உறுப்பினர் எஸ்.எம்.எம்.முஸ்தபா அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, கௌரவ உறுப்பினர் அஸ்பர் அவர்கள் இந்த விடயத்தை என்ன நோக்கத்திற்காக கொண்டு வந்திருக்கின்றார் என்பது அவருக்கு மட்டும்தான் தெரிந்த காரணமாக இருக்கின்றது. ஆனால் பாடசாலை மாணவர்களுடைய கல்வி தடைப்பட்டிருக்கின்றது. பாடசாலை கல்வி பெற்றோர்களால் கூறப்பட்ட நியாயமான அச்சத்தின் காரணமாக கல்வி தடைப்பட்டிருக்கின்றது என்றால் இங்கு இருக்கின்ற எல்லோருக்கும் இந்த உயரிய சபை ஊருக்குரிய சபை ஆகவே நாங்கள் முக்கியமாக கவனம் எடுக்க வேண்டியதாக இருக்கின்றது. அதிபர் என்கின்ற விடயம் சம்மந்தமாக என்னுடைய ஞாபகத்தின்படி றிட் வழக்கு இருக்கின்றது. அதில் தடை உத்தரவு கொடுக்கப்பட்டிருக்கின்றதா என்பது எனக்கு தெரியாது. எதுவாக இருந்தாலும் கல்வி கட்டமைப்போடு உட்பட்ட விடயம். கௌரவ தவிசாளர் தீர்மானம் ஒன்றுக்கு வந்ததற்கு பின்னர் அதில் நாங்கள் கையடிப்பது உசிதம் இல்லை. வலயக் கல்விப் பணிப்பாளரை சந்தித்து பேசுவோம். ஆனால் கல்வி கட்டமைப்புக்குள் இடமாற்றத்தை உள்வாங்குவது என்பது அதன் விளைவுகளையும் கவனத்தில் கொள்ள வேண்டும். எனவே நாங்கள் அந்த விடயத்தில் மிகக் கவனமான முறையில் எங்களது முன் ஏற்பாடுகளை செய்ய வேண்டி இருக்கும். இந்த விடயத்தை கொண்டு வந்ததற்காக என்னுடைய அபிப்பிராயத்தை கூறுகின்றேன். இந்த சபையானது இந்த சபையினுடைய காலத்தை செலவு செய்து அந்த விடயத்தில் தீர்மானங்கள் எடுக்கின்ற போது அது சம்மந்தப்பட்ட திறத்தவர்கள் எங்களுக்கு

வழங்கப்படுகின்ற ஆலோசனையாவது ஒழுகி நடப்பார்களா என்ற உத்தரவாதம் இல்லாமல் அது செயற்படுவது கால விரயமாக அமையும் என்பதையும் கௌரவமாக தெரிவித்துக் கொள்கின்றேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
அந்த காரணத்துக்காகத்தான் இந்த சபை மக்களின் நலனை பேண வேண்டிய சபை. அந்த முக்கியத்துவத்தை கொடுத்துதான் நானும் அதில் ஈடுபட்டேன். நாம் ZDE இடம் சென்று இதை எப்படி அனுகலாம் என்ற ஆலோசனையை பெறுவோம். இறுதியில் நடவடிக்கை எடுக்க வேண்டியவர் அவர்தான். இல்லாவிட்டால் அவருக்கு எதிராகத்தான் அடுத்த நடவடிக்கை பொதுமக்களோ அல்லது எவரோ எடுக்க வேண்டி வரும். நாளைக்கே அதை செய்வோம்.

**கௌரவ உறுப்பினர் யூ.எல்.அஸ்பர் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, பாதிக்கப்பட்ட பெற்றோர்களின் பிள்ளை ஒன்றை பாடசாலையில் இருந்து அல் மர்ஜான் பாடசாலைக்கு மாற்றி இருக்கின்றார்கள். அந்த நேரம் அதிபர் கொடுத்த விடுகைப் பத்திரத்தில் வேறு விசேட திறன் இருப்பின் என்ற ஒரு வரி இருக்கின்றது. அந்தப் பிள்ளை புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த பிள்ளை. அது இதில் எழுதப்படவில்லை. பெற்றோர் சென்று ஏன் இது எழுதப்படவில்லை என்று கேட்டதற்கு அதிபர் அது அப்படி எழுதுவதில்லை எங்கும் எழுதுவதில்லை என்று கூறியிருக்கின்றார். ஆனால் அல் அர்ஷத் பாடசாலையில் கொடுத்த விடுகைப் பத்திரத்தில் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்திருக்கின்றார் என்று வழங்கப்பட்டிருக்கின்றது. இதிலே விளங்குகின்றது குறித்த அதிபர் கோபத்தை காட்டுகின்றார் என்று. அப்படியான அதிபர் அவ்விடத்தில் இருக்க இயலாது. அதற்குரிய நடவடிக்கையை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்வதோடு, கல்லறிச்சல் 02 இல் மலையார் ஆரப்பத்தையின் வடிகான் மற்றும் மதகு அமைக்க வேண்டுமென்றும், சென்னல் கிராமம் 01ம் பிரிவில் மையவாடிக்கு மேற்குப்புர பாதையில் உள்ள மலையை உடைத்து செப்பனிட வேண்டும் என்றும், கல்லறிச்சல் 02ம் பிரிவில் உள்ள S வாய்க்கால் மற்றும் S 29 ஆம் வாய்க்கால்களையும் துப்பரவு செய்ய வேண்டுமென்றும் பல மாதங்களாக தங்களிடம் கூறி வருகின்றேன். அதனையும் கவனத்திற் கொள்ளுமாறு தாழ்மையுடன் கேட்டு விடைபெறுகின்றேன்.

**கௌரவ உறுப்பினர் ஏ.சீ.எம்.சஹீல் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, குறித்த பாடசாலை சம்மந்தமாக பாடசாலை அதிபரை இடமாற்றக் கோரியும் அதே போன்று பழைய SDC ஐ மாகாண கல்விப் பணிப்பாளர் இரத்துச் செய்தார்கள். புதிய SDC இற்கு எதிராகவும் ஒரு வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருக்கின்றது. பிறகு நீதிமன்றத்திலே அவரை அச்சுறுத்தியதாக ஒரு வழக்கு பதியப்பட்டிருக்கின்றது. ஆகவே 03 வழக்குகள் இது சம்மந்தமாக செய்யப்பட்டிருக்கின்றது. இது சம்மந்தமாக நேரடி கள விஜயம் செய்து பிரச்சினை குறித்து அந்தப் பெற்றோர்களிடம் பேசி ஒரு தீர்மானத்திற்கு வருவோம் என்ற நிலைப்பாட்டிற்கு அந்த இடத்திற்கு சென்ற போது இவர்களுக்கு நான் அடித்ததாக பொலிஸில் புகார் செய்யப்பட்டு நீதிமன்றத்திலே பொய்யான ஒரு வழக்கு தாக்கல் செய்யப்பட்டு சமரசம் செய்யப்பட்டது.

ஆனால் அந்தப் பாடசாலை உங்களுக்கு தெரியும் முதலாவது புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தவர் என்றால் உங்களது மருமகன் Dr சிராஜ் அவர்கள். அதன் பின்னர் 32 ஆண்டுகளுக்கு பின்னர் அந்தப் பாடசாலையிலே ஒரு மாணவர்களும் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடையாத நிலை இருந்தது. குறித்த வட்டாரத்தில் அப் பாடசாலை அமைந்துள்ளதன் காரணமாக நானும் எமது சக உறுப்பினர் கோவிந்தசாமி ஐயா அவர்களும் முதற் தடவையாக விஜயம் செய்கின்றோம் அங்கே பௌதீக வளங்களை எவ்வாறு அபிவிருத்தி செய்ய வேண்டும் என்ற நிலையிலே நாங்கள் இருவரும் சென்றிருந்தோம். அங்கே சென்று பார்க்கின்ற போது கட்டடங்கள் இல்லை, பாடசாலை மாணவர்களுக்கு ஒழுங்கான கதிரை மேசைகள் இல்லை, அதே போன்று ஆசிரியர்கள் கற்பிப்பதற்கு கூட மேசை இல்லாமல் கதிரை இல்லாமல் இருந்த சூழ்நிலை அந்தப் பாடசலையிலே இருந்தது. நாங்கள் உடனடியாக எங்களது சொந்தப் பணத்திலேதான் கௌரவ

உறுப்பினர் கோவிந்தசாமி ஐயா அவர்களும் அந்தப் பாடசாலைக்கு உதவி செய்ய வேண்டும் என்ற அடிப்படையிலே அவரும் அவருடைய சொந்தப் பணத்தில் உதவியை செய்தார்.

அதன் பிற்பாடு அங்கு புலமைப்பரிசில் பரீட்சையில் ஒரு மாணவனாவது 32 ஆண்டுகளுக்கு பின்னர் ஒருவராவது சித்தியடைய வேண்டும் என்ற இலக்கு எனக்கு இருந்தது. அந்த அடிப்படையில்தான் என்னுடைய ஒரு வருடத்திற்கான கொடுப்பனவை அந்தப் பாடசாலைக்கு ஒதுக்கி அந்தப் பாடசாலையிலே ஒரு பிள்ளையாவது புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைய வேண்டும் என்ற இலக்கு எங்களுக்குள் குடிகொண்டது. அதன் காரணமாகத்தான் 2019 வீரமுனையை சேர்ந்த அஜந்தன் சேர் அவர்களிடம் 15 பிள்ளைகளையும் ஒப்படைத்து மாதம் 15000.00 ரூபா கொடுத்து புலமைப் பரிசில் பரீட்சைக்குரிய பிரத்தியோக வகுப்புக்காக நாங்கள் அனுப்பி இருந்தோம். அந்த சூழ்நிலையில் எங்களது முயற்சியும் எங்களது இலக்கும் நல்ல நோக்கத்திற்காக அமைந்திருந்ததன் காரணமாக 32 ஆண்டுகளுக்கு பின்னர் ஒரு மாணவன் புலமைப் பரிட்சையிலே சித்தியடைந்த வரலாறு இருக்கின்றது. அதன் பின்னர் குறிப்பிட்ட பிரச்சினையிலே சம்மந்தப்பட்டவர்களுடைய பிள்ளை 2020 இலே சித்தியடைந்து இருக்கின்றார்.

பாடசாலை அதிபர் இருக்கின்றார் அதே போன்று முன்னாள் கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் இருக்கின்றார். அரசியல் சூழ்நிலை காரணமாக அங்கே சித்தி எய்திய பிள்ளைகளுக்கு கூட பாராட்டு விழா பகற் போசணத்துடன் செய்யப்பட்டது. அந்த நிலையில் கூட எங்களை அனுமதிக்கவில்லை. ஆனால் அந்த பாடசாலை அதிபர் மீது எங்களுக்கு கோபம் இல்லை. அந்தப் பாடசாலையை பொருத்த வரையிலே பழைய கட்டடங்களாகவும் ஒரு புதிய கட்டடமாவது கிடைக்குமா என்ற ஏக்கம் அவர்களுக்கு இருந்தது. சுமார் 180 மாணவர்களுக்கு மேற்பட்ட மாணவர்கள் கல்வி கற்கின்றார்கள். அந்தப் பிரதேசத்தை எடுத்துக் கொண்டால் வருமானம் குறைந்த பிரதேசமாக இருக்கின்றது. அந்த நிலையிலே இந்த அதிபரை நாங்கள் நினைத்திருந்தால் அரசியல் காரணங்களுக்காக நாங்கள் உதவி செய்கின்றோம் இடமாற்றம் செய்வோம் என்று சிந்தித்திருக்கலாம்.

ஆனால் அவ்வாறு செய்யவில்லை. ஏன் அந்தப் பாடசாலையில் நல்ல வளம் மிக்க பாடசாலையாக வர வேண்டும் என்ற எதிர்பார்ப்பு எங்களுக்கு இருந்ததன் காரணமாக எங்களுடைய கோபங்களை தூக்கி எறிந்தோம். ஆனால் அங்கே பாடசாலைக்குரிய கட்டடம் வருகின்றது. அந்தக் கட்டடம் நான் நினைக்கின்றேன் ஆண்டினுடைய இறுதிக் காலகட்டத்தில்தான் அந்த நிதி ஒதுக்கப்படுகின்றது. இன்று ஓய்வுபெற்றிருக்கின்ற எங்களுடைய பிரதம கணக்காளர் அவர்கள் அந்தப் பணத்தை ஒதுக்கி இருந்தார். யாருமே கண்டிராத போது அதிபர் வந்ததன் பின்னர் அந்தப் பாடசாலையிலே ஒரு மாற்றம் கண்டது என்பது உண்மை. ஆனால் ஒரு சிறு குழுக்களுக்காக மாத்திரம் நாங்கள் ஏனைய மாணவர்களுடைய கல்வியிலே பின்தங்க வைக்க முடியாது. அதன் காரணமாக இந்த விடயம் பள்ளிவாசல் தொட்டு அங்கே இருக்கின்ற கிராம சபைகள் தொட்டு பாடசாலைகள் வரைக்கும் இந்தப் பிரச்சினை ஒரு சாரார் மாத்திரம் கைகொண்டு இவ்வாறான நிலமைக்கு கொண்டு சென்றிருக்கின்றார்கள். குறிப்பாக அந்தப் பாடசாலையின் கல்வியில் அக்கறை கொண்டு இந்த சபை நிதானமாக முடிவு எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்வதோடு, இடமாற்றம் வந்த போது பெற்றோர்கள் எல்லோரும் ஆர்ப்பாட்டம் செய்துதான் இடமாற்றம் இரத்துச் செய்யப்பட்டது.

**கௌரவ உறுப்பினர் யூ.எல்.அஸ்பர் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, கௌரவ உறுப்பினர் சஹீல் அவர்கள் பேசியவாறு அவரின் கவனத்திற்கு இந்த பிரச்சினை போவதற்கு முன் என்னிடம் வந்தது. நானும் ஒரு உறுப்பினர். எனது வட்டாரத்திற்குள் 2, 3 பாடசாலைகள் இருக்கின்றது. அதே மாதிரி ஒவ்வொரு வட்டாரத்திற்குள்ளும் பாடசாலைகள் இருக்கின்றது. ஊர் சம்மந்தமான அபிவிருத்தி கல்வி அபிவிருத்தி சம்மந்தான கலந்துரையாடல் ஏற்பாடு செய்கின்றோம். இன்னார் கலந்து கொள்கின்றார்கள் பெற்றோர்கள் கலந்து கொள்ளுங்கள் என்று அதிபர் கடிதம் அனுப்புகின்றார்.

**கௌரவ உப தவிசாளர் ஏ.அச்சி முஹம்மட் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, அந்தப் பாடசாலையை பொருத்தவரையில் பாடசாலை வளவில் கொடுத்த துண்டை Board இனை செய்வதற்கு கூட அங்கு இருப்பவர்கள் உதவி செய்யவில்லை.

ஒரு 12 அடி பாதையை கொடுத்து அதில் Board வைப்பதற்கு எவ்வளவோ முயற்சி செய்தும் வரவில்லை. இது இறுதி அமர்வாகவும் இருக்கலாம். இவ்வளவு காலமும் செய்ததில் நன்மை இருக்கும் தீமை இருக்கும். இதை இறைவனும் பொருந்திக் கொண்டு ஊர் மக்களும் நம்மை ஏற்றுக் கொள்ள வேண்டும். நாம் மீண்டும் புணர்வாழ்வு எடுக்கின்ற மாதிரி தவறுகளை திருத்தி அடுத்த சபையில் முன் கொண்டு செல்ல வேண்டிய தருணம். நீண்ட நேரம் இதைப் பற்றி பேசவில்லை. ஒரே ஒரு விடயத்தை மாத்திரம் சொல்ல வேண்டும். எது எப்படி நடந்தாலும் பிள்ளைகள் அனைவரும் உளவியல் ரீதியாக தாக்கம் அடைந்திருக்கின்றார்கள். அந்த தாக்கத்தை நிவர்த்தி செய்ய வேண்டும். அது மாணவச் செல்வங்கள். அவர்களுக்கு எதுவுமே தெரியாது. தரம் பிரித்து காட்டுவது என்பது ஏற்றுக் கொள்ள முடியாத சூழல். எனவே இந்த சபை எடுக்க வேண்டிய அடுத்த நடவடிக்கை பிள்ளைகளை வைத்துதான். அது சம்மந்தமாக நீங்கள் நல்ல முடிவு எடுத்திருக்கின்றீர்கள். நாளை சென்று அவரிடம் கதைத்து ஒரே இலக்கை வைத்து செயற்பட முடியாது. ஒரு வரையறைக்குள்தான் நிற்கலாம்.

**கௌரவ உறுப்பினர் ஏ.எல்.எம்.ஜிப்ரி அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, S 24 மலையடி 4 இல் இப்றாஹிம் மௌலவியின் பிரச்சினை நடந்து பாதை விட வேண்டும் என்று பாதையை விட்டுத் தந்திருக்கின்றார். அதில் வடிகான் ஒன்று இருக்கின்றது. நாம் குழு ஒன்று நியமித்து குழு பார்த்து இதை கட்டாயம் செய்ய வேண்டும் என்று சொன்னது. இனியாவது அந்த வடிகானை செய்து கொடுக்கலாம் தானே. வெளிநாட்டில் இருந்து தொலைபேசியில் கதைக்கின்றார் இந்த வடிகானையாவது செய்து தாருங்கள் நான் பாதையும் விட்டுத் தந்திருக்கின்றேன். அப்படியானால் நாம் அந்த வடிகானை செய்து கொடுக்கத்தான் வேண்டும்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
கட்டாயம் அதை செய்ய வேண்டும்.

**கௌரவ உறுப்பினர் யூ.எல்.அஸ்பர் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, வடிகான் செய்கின்ற அமைப்பில் இல்லை. இரண்டு பக்கமும் அத்திவாரம் இருக்கின்றது அதன் நடுவால் மழை நீர் செல்கின்றது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
ஒரு வடிகான் செல்கின்றது பின்னால். இந்தப் பாதை செல்வதால் பாதைக்கு வடிச்சல் இருக்க வேண்டும் அதை செய்யலாமா என்று பார்க்க வேண்டும். நீங்கள் சொல்வது பாதை ஓரமாக இருப்பது. நான் அதை கட்டாயம் பார்க்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் ஐ.எல்.எம்.மாஹிர் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, மீண்டும் கதைக்க விரும்பவில்லை ஐமாலியா பாடசாலை பிரச்சினை அங்கு படிக்கின்ற மாணவர்கள் சுதந்திரமாக அமைதியான சூழலில் படிப்பது அவர்களின் உரிமை. பல கருத்துகள் கூறப்பட்டது. அவமானங்களுக்கும், பிள்ளைகளை பிரித்து பார்ப்பதும் இல்லாமல் சமமான உரிமை சகல மாணவர்களுக்கும் கிடைக்கப்பெறுவதை இந்த சபை உறுதிப்படுத்த வேண்டும்.

**கௌரவ உப தவிசாளர் ஏ.அச்சி முஹம்மட் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, சபையை பொருத்தவரையில் கல்விதான் நமது மூச்சு, கல்விக்காகத்தான் நமது பேச்சு.

**கௌரவ உறுப்பினர் ஏ.யூசுப் லெப்பை அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, சபைக்கும் ஒரு சட்டதிட்டங்கள் இருக்கின்றது. ஒவ்வொரு திணைக்களத்திற்கும் உயர்மட்ட உத்தியோகத்தர்கள், திணைக்களங்கள், செயலாளர்கள் இருக்கின்றார்கள். அவற்றின் மூலம் தீர்க்க வேண்டிய விடயங்களை நாங்கள் முடியாத விடயங்களில்

முட்டி மோதுவதை விட கல்விக்கு செய்யக்கூடிய ஒத்துழைப்புகளை சபைக்கும் ஒரு கடப்பாடு இருக்கின்றது. அடிப்படை வரையறைக்குள் செயற்பட்டால் வெற்றியளிக்கும் என்று நினைக்கின்றேன்.

கடந்த வாரம் எனது மைத்துனர் இறையடி எய்துவிட்டார். சென்னல் கிராமத்தில் Telecom ஆதம்பாவா ஒரு காலத்தில் பொலீஸ் திணைக்களத்தில் பொலீஸ் உத்தியோகத்தராக இருந்தார். பூர்வீக காலம் சென்னல் கிராமமாக இருந்த படியினால் அவர் அங்கு வசித்து வந்த நேரத்தில் இறையடி எய்தினார். அந்த சம்பவம் கட்டாக்காலிகளின் அட்டகாசத்தினால்தான் மரணம் எய்தியது. இறைவனின் ஏற்பாடு அதையும் நாங்கள் ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும். அழ்பர் பள்ளிவாசல் மையவாடியில் நல்லடக்கம் செய்யப்பட்டுள்ளது. அந்த நேரத்தில் அங்கு சென்று அவதானித்த போது மையவாடியில் 03 பக்கமும் சுற்று மதில் அமைக்கப்பட்டிருக்கின்றது. பாடசாலை பக்கம் அமைக்கப்படாமல் இருக்கின்றது. அதனால் கட்டாக்காலி மாடுகளின் தொல்லைகள் ஜனாசாவை நல்லடக்கம் செய்து வந்ததன் பின்னர் கட்டாக்காலிகளின் பட்டிகள் சென்று அடக்கப்பட்ட கப்ர் ஸ்தானங்களை சேதப்படுத்தி இருக்கின்றது. அந்த நேரம் அடக்கிய படியினால் அதிலும் சேதம் ஏற்பட்டிருக்கின்றது. ஆகவே 03 பக்கமும் சுற்று மதில் அமைக்கப்பட்டிருக்கின்றது. ஒரு புறம் மாத்திரம் மீதமாக இருக்கின்றது. எங்களுக்கும் எங்களது சட்டதிட்டங்களுக்கு அமைய மையவாடிகளை பரிபாலிக்கின்ற கடமை இருக்கின்ற படியினால் எதிர்வரும் அபிவிருத்தி திட்டத்தில் கண்டிப்பாக இதனை அமைத்துக் கொடுப்பதற்கு உயரிய சபையின் அங்கீகாரத்தோடு இந்த பிரேரணையை முன்வைக்கின்றேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
கட்டாக்காலி மாடுகள் இந்த ஊரில் பேசு பொருள். இன்னும் இந்த சமூகம் பொருப்பெடுக்காமல் பிரதேச சபை கட்டாக்காலி மாடுகளை கட்டுப்படுத்த வேண்டும். மையவாடியை பொருத்தவரையில் மையவாடி சட்டப்படி பிரதேச சபையின் பராமரிப்பில் வர வேண்டும். ஆனால் நமது பகுதிகளில் மையவாடிகள் பள்ளிவாசல்களில் ஒரு அம்சமாக இருப்பதனால் ஒரு பிரச்சினை உருவாகின்றது ஏனென்றால் அது பிரதேச சபைக்கு பாரம் கொடுக்கப்படாத ஒரு இடமாக கருதப்படுகின்றது. நமது தமிழ் கிராமங்களில் உள்ள சகல சவக்காலைகளும் சபைக்கு உத்தியோகபூர்வமாக கையளிக்கப்பட்ட இடங்களாக காணப்படுகின்றது. ஆனால் துரதிஸ்டவசமாக நமது பகுதியில் அது நடைமுறையில் இல்லை. நாம் பல முறை முயற்சித்தும் இன்னும் முஹல்லா மஹல்லா மையவாடி கூட பிரதேச சபைக்கு பொறுப்பு தரவில்லை. அந்த விடயத்தை சமூகம் பொறுப்பெடுத்து அந்த விடயங்களை நம்பிக்கையாளர் சபை மூலமாக செய்விக்க வேண்டும் என்று கேட்பதோடு, கௌரவ உறுப்பினர் நளீம் அவர்கள் மையவாடி சம்மந்தமாக கடிதம் தந்திருந்தார் அந்த கருத்துக்களை சுருக்கமாக பேசும்படி வேண்டிக் கொள்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் எஸ்.நளீம் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, சபையின் அனுமதி இருந்தால் இதை ஒரு பிரேரணையாக ஏற்றுக்கொள்ளுமாறு கௌரவ தவிசாளர் அவர்களை கேட்டுக் கொள்கின்றேன். கௌரவ தவிசாளர் அவர்கள் ஊரில் இல்லாத காரணத்தினால் காலம் கடந்ததனால் இதனை பிரேரணையாக ஏற்றுக் கொள்ள முடியாத சூழ்நிலை ஏற்பட்டது. 04வது சபையின் 58வது அமர்வுக்கான பிரேரணையாக முன்மொழிகின்றேன். ஜனாசா நல்லடக்கம் செய்வதற்காக மையவாடி காணியினை பெற்றுக் கொள்ளல். கௌரவ தவிசாளர் அவர்களே, சம்மாந்துறை பிரதேச சபை, சம்மாந்துறை பிரதேச செயலக எல்லைக்குட்பட்ட சம்மாந்துறை பிரதம நம்பிக்கையாளர் சபையின் பராமரிப்பின் கீழ் உள்ள 05 மையவாடிகளில் இன்று ஜனாஸா நல்லடக்கம் செய்ய முடியாத நிலையில் உள்ளது. இதனை தாங்கள் உட்பட இச் சபையில் உள்ள அனைத்து கௌரவ உறுப்பினர்களும் அறிந்த விடயம் என நம்புகின்றேன்.

எனவே கௌரவ தவிசாளர் அவர்களே, தகிய்யாப் பள்ளி மையவாடி, கையர் பள்ளிவாசல் மையவாடி, ஜாமிஉல் அழ்பர் பள்ளிவாசல் மையவாடி, முனீர் பள்ளிவாசல் மையவாடி, சலாம் பள்ளிவாசல் மையவாடி என்பனவாகும். இதில் ஜாமிஉல் அழ்பர் பள்ளிவாசலிலும், முனீர் பள்ளிவாசல் மையவாடியிலும் குறிப்பிட்ட சில காலத்திற்கு ஓரளவு ஜனாசாக்களை நல்லடக்கம் செய்ய முடியும். ஏனைய 03 மையவாடிகளிலும் ஜனாசாக்களை நல்லடக்கம் செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது என நான் நினைக்கின்றேன். எனவே இலங்கை அரசியலில் தனக்கென தனியான இடம் பிடித்துக் கொண்டு அனைத்து இனங்களை சமனாக நேசிக்கின்ற அரசியல் பண்பாளன்

சம்மாந்துறையின் முதன் மகன் முன்னாள் அமைச்சர் மர்ஹூம் M.A. அப்துல் மஜீட் அவர்களின் தூரநோக்கு சிந்தனையிலும் உண்ணதமான எண்ணக்கருவிலும் உருவாக்கப்பட்ட சம்மாந்துறை மண்ணுக்கான பல்வேறுபட்ட அபிவிருத்தி திட்டங்களின் கீழ் உருவாக்கப்பட்ட மையவாடிதான் முஹல்லா மஹல்லா மையவாடி ஏறத்தாள 33 ஏக்கர் நிலப்பரப்புக்களை கொண்ட மையவாடியாகும்.

ஆனால் கௌரவ தவிசாளர் அவர்களே, இன்று இம் மையவாடியின் கூடுதலான நிலப்பரப்புக்கள் முடிவடைந்த நிலையிலும் குறிப்பாக ஏற்கனவே ஜனாசாக்கள் நல்லடக்கம் செய்யப்பட்ட பகுதியாகவும் 2004.12.26 ஆந் திகதி ஏற்பட்ட சுனாமி அனர்த்தத்தினால் மரணித்தவர்களின் ஜனாசாக்களை நல்லடக்கம் செய்யப்பட்ட ஒரு பிரதேசமாகவும் பாடசாலைக்காக ஒரு பகுதியும் மலைசார்ந்த பிரதேசமாகவும் பள்ளிவாசால் சார்ந்த இடமாகவும் அடையாளப்படுத்தப்பட்ட நிலையில் மீதமாக உள்ள குறுகிய நிலப்பரப்பு மாத்திரம்தான் எஞ்சியுள்ளது என தாங்கள் உட்பட சபையோர் அனைவரும் அறிந்த விடயமாகும் ஆனால் மேற்குறிப்பிட்ட மையவாடிகளில் ஜனாசா நல்லடக்கம் செய்ய முடியாத நிலையினால் சகல ஜனாசாக்களும் இன்று முஹல்லா முஹல்லா மையவாடியில்தான் நல்லடக்கம் செய்யப்படுகின்றது. நாள் ஒன்றுக்கு சுமார் 3 தொடக்கம் 4 அல்லது 5 ஜனாசாக்கள் நல்லடக்கம் செய்யப்படுவதற்கான தேவைப்பாடு இருக்கின்றது. எனவே கௌரவ தவிசாளர் அவர்களே, இந் நிலை தொடருமாயின் எதிர்காலத்தில் ஜனாசாக்களை நல்லடக்கம் செய்வதற்கு மிகவும் சிரமமான நிலை உருவாகும் என நினைக்கின்றேன். மேலும் கௌரவ தவிசாளர் அவர்களே இன்று எமது ஊரில் காணியின் விலைப் பெறுமானம் உச்சம் தொட்ட நிலைய அறிந்திருக்கின்றமையினால் எதிர்காலத்தில் இதற்கான காணியினை பெற்றுக் கொள்வதற்கு மிகவும் ஒரு சவாலான விடயமாகும். எனவே கௌரவ தவிசாளர் அவர்களே, இது சம்மந்தமாக சம்மந்தப்பட்ட அதிகாரிகளின் கவனத்திற்கு கொண்டு சென்று மையவாடிக்கான காணியினை பெற்றுக் கொள்ள வேண்டும் என கௌரவ தவிசாளர் உட்பட கௌரவ உறுப்பினர்கள் அனைவரிடமும் தாழ்மையாக கேட்டுக் கொள்வதோடு,

கௌரவ உறுப்பினர் யூசுப் லெப்பை அவர்கள் முன்வைத்த ஒரு கோரிக்கைக்காக ஜாமிஉல் அழ்பர் மையவாடி சம்மந்தமாக இந்த சபையின் முதலாவது கூட்டத்தில் கௌரவ தவிசாளர் அவர்களிடம் பேசி இருந்தேன். ஆனால் அன்று இருந்த அரச சட்ட நியதியின் படி சபை நிதியில் இருந்து மையவாடிக்கு செலவு செய்ய முடியாதிருந்தது. ஆனால் எங்களுடைய வளங்களை பயன்படுத்தி அதனை துப்பரவு செய்வதற்கான வேலைகளை செய்யலாம் என்று கூறியிருந்தார். அந்த நேரத்தில் பாரிய சிரமதானம் ஒன்றினை செய்து மையவாடியையும் அதனை அண்டிய பிரதேசத்தையும் துப்பரவு செய்திருந்தோம். அதன் பிற்பாடு உண்மையாகவே வறுமைக் கோட்டின் கீழ் வாழ்கின்ற மக்கள் அந்த பிரதேசத்திலே வாழ்கின்றார்கள். அம் மக்களின் பங்களிப்போடு ஏறத்தாள 03 ஏக்கர் பரப்பளவுள்ள சுற்று மதில் அமைக்க வேண்டும் என்று அந்த பிரதேச மக்களின் வேண்டுகோளுக்கிணங்க இந்த சபையினால் வழங்கப்படும் கொடுப்பனவில் இருந்து ஒரு வருடத்திற்கான கொடுப்பனவை வழங்கி எங்களால் முடியுமானவரை மையவாடியின் சுற்றுமதிலை அமைத்திருக்கின்றோம். முடியுமாக இருந்தால் இருக்கின்ற காலத்தில் இந்த சபையில் இருக்கின்ற காலத்திற்குள் இது எல்லோருக்கும் சொந்தமான இடம். உங்களால் முடியுமாக இருந்தால் தயவு செய்து மீதமாக இருக்கும் வேலைகளை செய்வதற்கு உங்களால் இயன்ற உதவிகளை எடுத்து அந்த மையவாடிக்கான சுற்று மதிலினை அமைக்க உதவி செய்யுமாறு கேட்டு எனது உரையை முடித்துக் கொள்கின்றேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
மையவாடி விடயம் முக்கியமான விடயம். ஆனால் சம்மாந்துறையை பொருத்தமட்டில் இந்த நாட்டிலேயே மிகப் பெரிய பரப்பு. அதில் தடைகள் இருக்கின்றது. என்னைப் பொருத்தமட்டில் சுனாமியினால் மரணித்த ஜனாசாக்களை அடக்கப்பட்டதை ஒரு தென்னந்தோப்பாக மாற்றியது சரியா பிழையா என்ற ஒரு பக்கம் இருக்க, அந்த பரப்பை கூட ஒரு சமூகம் என்ற ரீதியில் நாம் பராமரிப்பது மிக குறைவு ஏதோ ஒரு காரணத்திற்காக மற்ற ஊர்களில் எப்படி இருக்கின்றதோ தெரியாது. சம்மாந்துறையில் மையவாடிகளை பராமரிப்பதற்கு சமூக பங்களிப்பு மிகவும் குறைவாக இருக்கின்றது. நாம் இறுதியில் தங்குமிடம் அதுதான். 6 அடி மட்டும்தான் சொந்தம் என தெரிந்து கொண்டும்.

எந்த மையவாடிக்கு சென்றாலும் அடக்குகின்ற பகுதி மாத்திரம் துப்பரவாக இருக்கும் மற்ற பகுதி எல்லாம் காடு. இதை சமூக பொறுப்பாக மஹல்லா நிர்வாகிகள் பொறுப்பாக எடுத்து மக்களின் பங்களிப்போடு பராமரிப்பு செய்யாவிட்டால் நியாயப்படுத்த இயலாது. முஹல்லா மஹல்லாவில் இருக்கின்ற பிரச்சினை என்னவென்றால் அடக்கப்பட்ட ஜனாசாக்களை விட தோன்டிய கல் இருக்கின்றது. இன்னும் 03, 04 வருடங்களில் நிரப்ப வேண்டிய நிலை வரும். நிரப்புவதற்கு மண் எடுக்க இயலாத நிலையும் வரும். அதற்கு தகுதியான பொருத்தமான இடம் இருக்குமானால் சபை என்ற ரீதியில் அந்த முன்மொழிவை செய்யலாம். பொருத்தமான அரச காணி எங்கு இருக்கின்றது. சம்மாந்துறைக்குள் ஹிஜ்ராபுரம் பாடசாலைக்கு ஒதுக்கி இருக்கின்ற காணி. அதற்குள் குடியாட்டம் உருவாக்கி அதற்குள் ஒரு பாடசாலை உருவாக்குவது என்பது பகல் கனவு. அவ்விடத்தில் பாரிய பரப்பு ஒன்று இருக்கின்றது. 04 ஏக்கர் கொண்ட நிலப்பரப்பு. அப்படியான முன்மொழிவை வைக்கலாம். ஹிஜ்ராபுர பாடசாலை எங்கயோ இயங்குகின்றது. குடியிருப்பாளர்கள் எல்லோரும் எங்கயோ வசிக்கின்றார்கள். அந்தக் காணிகளை மில் காரர்களுக்கு விற்கப்படுகின்றது. நான் பாராளுமன்ற உறுப்பினராக இருக்கும் போது புணர்வாழ்வின் கீழ் எல்லோரிடமும் சென்று குடிலாவது கட்டுங்கள் வீடு எடுக்கலாம் என்று, அவர்கள் செய்யவில்லை. இப்படியான இடங்களை இனங்கண்டால் அதை ஒரு முன்மொழிவாக செய்யலாம்.

**கௌரவ உப தவிசாளர் ஏ.அச்சி முஹம்மட் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்கனே, காணி சம்மந்தமாக வேறாக்கள் காணிகளை கை அகற்றிருப்பார்கள். ஹிஜ்ரா புரத்திற்குரிய காணியை மறைந்த மர்ஹூம் மஜீட் MP அவர்கள் சட்டரீதியாக அளந்து அதை யாரும் அபகரிக்கவில்லை. ஆனால் தற்போது சில ஆட்கள் அபகரித்திருக்கின்றார்கள். நான் பல முறை வலயக்கல்வி பணிப்பாளரிடம் சுட்டிக்காட்டிக் காட்டியிருக்கின்றேன். காணியின் பெறுமதி தெரியாமல் விட்டுவிட்டு இருக்கின்றீர்கள். நான் எத்தனையோ தடவை முருங்கை மரத்தை உடைத்து எறிந்திருக்கின்றேன். நிரந்தரமான ஒன்றை வைத்துவிட்டு அவர்கள் உரிமை கொண்டாடுவார்கள் என்று. அப்படி செய்பவர்கள் பல காணிகளை அபகரித்தவர்கள். ஆனால் அது அவர்களுக்கு விளங்குதில்லை. முன்னர் இருந்தவர்களுக்கு ஏதோ கையூட்டல் நடப்பதனால் அது நடந்து கொண்டிருக்கின்றது. நான் சொன்னேன் ஆசிரியர்களுக்கு ஒரு Training Center ஆவது அமைக்க வேண்டும் என்று. அது தற்போது இயலாத காரியம்.

கௌரவ உறுப்பினர் ஜிப்ரி அவர்கள் சொன்னது ஞாபகம் இருக்கின்றது நீங்கள் வாகனத்தை தந்தால் வயல் இருக்கின்றது மண்ணை எடுத்து நிரப்பித் தருகின்றேன். இதில் குறிப்பாக எல்லோரும் கவனம் எடுக்க வேண்டிய விடயம் செலவுக்கு மாத்திரம்தான் சபையை நாடுகின்றார்கள். வரவு ஒரு சதம் கூட வருவதில்லை. இன்னும் அந்த மக்களின் மனதில் இருப்பது பள்ளிவாசல் காணி என்று அதை எப்போது நினைக்கின்றார்கள் வரவு வருகின்ற நேரம் மாத்திரம்தான். புணர்நிர்மானம் செய்கின்ற நேரம், மற்ற வேலைகள் செய்கின்ற நேரம், அவர்களுக்கு என்ன என்ன செய்ய வேண்டுமோ அதை மாத்திரம்தான் செய்து கொண்டிருக்கின்றார்கள். நாம் இல்லாவிட்டாலும் சட்ட ரீதியாக வருகின்ற நேரம் அது பிழை பள்ளிவாசல் அவ்வளவு நிலத்தையும் வைத்திருக்க இயலாது. இந்த நாடு இருக்கின்ற சூழ்நிலையில் இதை நாங்கள் அவதானித்து வாழ வேண்டும்.

முஹல்லா மஹல்லா என்று சொல்வதை விட கிழக்கு மாகாணத்திலையோ முதலாவது BA நமது ஊரை தவிர மற்ற ஊர்களில் BA மஜீட் என்றுதான் சொல்வார்கள். ஏன் அந்த மையவாடிக்கு மஜீட் மையவாடி என்று இன்னும் மனது வரவில்லைதானே. சொல்லும் போது மஜீட் மையவாடி என்று பெயர் சூட்டப்பட வேண்டும். அந்த பெயரை வைப்பதில் என்ன குறை வரப்போகின்றது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
அந்தப் பெயரை தற்போது வைத்திருக்கின்றோம். கௌரவ அமைச்சர் ரிஷாட் பதியுதீனின் அனுசரணையில் கட்டப்பட்டதை M.A அப்துல் மஜீட் ஞாபகார்த்த என்று வைக்கப்பட்டுள்ளது. எனது எண்ணம் இருந்தது அது கைகூடவில்லை. அப்துல் மஜீட் ஆத்மீக பூங்கா என்ற ரீதியல் மாற்றுவதற்கு ஒரு எண்ணம் இருந்தது.

**கௌரவ உப தவிசாளர் ஏ.அச்சி முஹம்மட் அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே, பொதுவாக நைனாகாட்டு வீதியால் செல்கின்ற அனைவருக்கும் தெரிய வேண்டும். அதிகமான மக்கள் மருதமுனையில் இருந்து சாய்ந்தமருது வரை அடக்கம் செய்யப்பட்டிருக்கின்றது. அடக்கப்பட்ட மஜீட் மையவாடியில் என்று அந்த பாதையில் Board போட்டிருக்க வேண்டும். கட்டாயம் ஊர் மக்கள் சேர்ந்து செய்ய வேண்டிய வேலை. ஒரு மனிதர் நன்றிக்கடனுடன் வாழ வேண்டும் என்றால் நிச்சயமாக அந்த பெயர் வர வேண்டும். அது மட்டுமல்ல மக்கள் உணர வேண்டும் மையவாடிகள் எல்லாம் நமது பொறுப்பு. அதே மாதிரி நாமும் நடந்து கொள்ள வேண்டும். பிரதேச சபைக்குரிய மையவாடிகளுக்கு 24 மணித்தியாலயமும் அடக்கக்கூடிய மாதிரி வெளிச்ச வசதிகளை எங்களது சபையால் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். அண்மையில் பார்த்தேன் கல்முனையில் சில மையவாடியில் நிறுவனங்கள், பொது மக்கள் உப தவிசாளர் சென்று சுத்தம் செய்திருக்கின்றார்கள். நாமும் ஒரு நேரத்தை ஒதுக்கினால் மல்வத்தையில் நாம்தான் ஒரு முறை சுத்தம் செய்தோம். மல்லிகை தீவு மையவாடி இல்லாமல் போகும் என்பதற்காக அத்திவாரம் போட்டது நாம். அதே போல் இலட்சக்கணக்கான மக்கள் வாழ்கின்ற ஊருக்கு சிறந்த முடிவை எடுத்து இன்னும் குறிப்பிட்ட காலத்திற்கு ஜனாசா அடக்குவதற்கு ஏற்பாட்டை நமது காலத்திற்குள் செய்ய வேண்டும் என்பதை கேட்டுக் கொள்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் எஸ்.எம்.எம்.முஸ்தபா அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே, ஹிஜ்ராபுர காணி என்ற விடயம் எங்களது ஊரில் அமைப்பு ரீதியாக நில குழுவில் நீங்களும் ஒரு உறுப்பினராக இருக்கின்றீர்கள். இது ஆரோக்கியமான எதிர்வு கூறல் ஒன்று. 33 ஏக்கர் இருந்தாலும் கூட அப்துல் மஜீட் ஞாபகார்த்த பூங்கா என்று பெயர்சூட்டப்பட வேண்டும். அடுத்தது மையவாடிகள் எல்லாவற்றையும் நமது பராமரிப்பின் கீழ் கொண்டு வருவதில் நீங்கள் எடுத்த முயற்சிகள் கை கூடாமல் இருக்கின்றது. அது சம்மந்தமாக மீள் பரசிலீனை செய்ய வேண்டிய கட்டாயம் இருக்கின்றது. கௌரவ உறுப்பினர் மாஹிர் அவர்களிடமும் எத்தி வைக்க விரும்புகின்றேன் அதில் கவனம் எடுக்க வேண்டும் என்று. அடக்கஸ்தலங்கள் சபையினுடைய பராமரிப்பின் கீழ் வரும் போது பராமரிப்புகள் திறன்பட அமையும். இந்த ஹிஜ்ரா புரத்திலே இருக்கின்ற பாடசாலைக் காணி என்ற விடயத்தில் பாடசாலை எந்தளவு அமையும் என்பது தற்போதைக்கு அனுமானிக்கக்கூடிய விடயமாக இருந்தாலும் கூட அங்கு பாடசாலை வருவதை விட 76000 சனத்தொகை இன்னும் 4 வருடத்தினால் எத்தனை இலட்சமாகும் என்பது தெரியாது. எங்களுக்கான அடக்கஸ்தலம் என்பது முக்கியமான ஒரு விடயமாக காணப்படுகின்றது. அங்கு ஒரு கிராமம் உருவாக்கப்பட்டு அந்த மாணவர்களுக்கு கல்வி வசதியை இலகுவாக பெற்றுக் கொள்ள வேண்டும். என்ற அடிப்படையில் கல்வி நிலையம் ஒன்று அமையப்பெறுகின்ற வளம் ஒன்று தூரமான பாதையாக இருக்கின்றது. எங்களுக்கான அடக்கஸ்தலம் என்பது குறுகிய பார்வையாக இருக்கின்றது. 33 ஏக்கரை வைத்துக் கொண்டு இருந்தாலும் கூட தற்போதய நிலலவரம் அடக்கஸ்தலத்திற்குரிய காணிகள் போதுமான காணியாக இருப்பது குறுகிக் கொண்டு இருக்கின்றது. சபைக்கு முன் வைக்கப்பட்ட பிரேரணையை ஏகமனதானதாக மேற்கொண்டு நடவடிக்கையினை கௌரவ தவிசாளர் முன்னெடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன்.

## தீர்மானம் - 04/58/19

கீழ்வரும் வேலைகளை செயற்படுத்துவதற்கான தீர்மானம்.

1. வைத்தியசாலை 3ம் குறுக்கு வீதியில் உள்ள கல்வெட்டினை திருத்தம் செய்தல்.
2. ரான்ஸ்போமர் வீதியும் S வாய்கால் வீதியும் சந்திக்கும் இடத்தில் உள்ள கல்வெட்டினை திருத்தம் செய்தல்.
3. ஆலமரத்து வீதியினை திருத்துதல்.
4. ஹிஜ்ரா 1ம் வீதி முடிவடையும் ஹிஜ்ரா 2ம் வீதியுடன் இணையும் வடிகானை திருத்தம் செய்தல்.
5. அம்பாரை 12ம் வீதியில் உள்ள கல்வெட்டினை திருத்துதல்.
6. மலையடி 4 இல் கல்வெட் அமைத்தல்.
7. விஷவைத்தியர் வீதியினை திருத்தம் செய்தல்.
8. மல் 10ம் வீதியினை திருத்துதல்.
9. சக்தி வீதி கல்வெட் அமைத்தல்.
10. சென்னல்கிராமம் 1ம் பிரிவில் மையவாடிக்கு மேற்குப் புரத்தில் உள்ள மலையினை உடைத்து செப்பனிடல்.
11. மலையார் ஆரப்பத்தை, கல்லறிச்சல் - 02 வடிகான் மற்றும் மதகு அமைத்தல்.

பிரேரித்தவர் : கௌரவ தவிசாளர் ஏ.எம்.முஹம்மட் நௌசாட்
ஆமோதித்தவர் : கௌரவ உறுப்பினர் யூ.எல்.அஸ்பர்

தீர்மானம் சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏகமனதாக அனுமதிக்கப்பட்டது.

**தீர்மானம் - 04/58/20**

ஜனாஸா நல்லடக்கம் செய்வதற்காக சம்மாந்துறை பிரதேசத்திற்கென ஒதுக்கப்பட்ட ஜனாஸா அடக்கும் இடங்கள் தற்போது ஜனாஸா அடக்க முடியாத நிலை 04 இடங்களில் ஏற்பட்டுள்ளதால் ஹிஜ்ரா புர பாடசாலைக்கு ஒதுக்கப்பட்டிருக்கின்ற காணியினை ஜனாஸா அடக்குவதற்காக பெற்றுக் கொள்வதற்கான தீர்மானம்.

பிரேரித்தவர் : கௌரவ தவிசாளர் ஏ.எம்.முஹம்மட் நௌசாட்
ஆமோதித்தவர் : கௌரவ உறுப்பினர் எஸ்.எம்.எம்.முஸ்தபா

தீர்மானம் சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏகமனதாக அனுமதிக்கப்பட்டது.

**கௌரவ உறுப்பினர் கே.எல்.சிஹாமா அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே, பொது நூலகத்தில் Conference Hall இற்கு கிறில் போடுவதாக பல தடவைகள் சொல்லியும் மதிப்பீடு செய்தும் செய்யவில்லை. எங்களது சொத்துக்களை பாதுகாப்பது எங்களது கடமை. ஆகவே அதையும் செய்ய வேண்டும்.

நாங்கள் பொதுமக்களின் பிரதிநிதியா என்ற ஒரு கேள்வி எங்களுக்குள் எழுப்பப்படுகின்றது. 2022.11.24 ஆந் திகதி போதையற்ற கிராமத்தை உருவாக்குதல் கலந்துரையாடல் தீர்மானம் இன்று பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அவர்களால் தான் இந்த கூட்டம் நடைபெற்றிருக்கின்றது. நாங்கள் அனைவரும் பொதுமக்களின் பிரதிநிதியாக இருக்கின்றோம். ஆனால் இதற்கு அழைக்கப்பட்டவர்கள் யார் என்றால் சுகாதார வைத்திய அதிகாரி, பிரதேச செயலாளர், செயலாளர் பிரதேச சபை, செயலாளர் நம்பிக்கையாளர் சபை, மாவட்ட மேற்பார்வை பொதுச் சுகாதார பரிசோதகர் சட்ட உதவி ஆணைக்குழு பணிப்பாளர், பொதுச் சுகாதார பரிசோதகர், தாதி உத்தியோகத்தர் ஆதார வைத்தியசாலை சம்மாந்துறை, பொலீஸ் விசேட அதிரடிப்படை மல்வத்தை, பணிப்பாளர் Gaffso அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

இதில் மக்கள் பிரதிநிதிகள் இல்லை. எல்லோரும் அரச உத்தியோகத்தர்கள்.

**கௌரவ உறுப்பினர் கே.எல்.சிஹாமா அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே, அரச உத்தியோகத்தர்கள் என்றாலும் போதைப்பொருள் என்று வரும் போது எங்களையும் எடுக்க வேண்டும்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

உங்களது வாதம் சரி. இந்த கலந்துரையாடல் பிரதேச சபை தவிசாளருக்கும் இல்லை. பிரதேச சபை செயலாளர். ஏனென்றால் நிர்வாக ரீதியில் ஒரு கலந்துரையாடல்.

**கௌரவ உறுப்பினர் கே.எல்.சிஹாமா அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே, Gaffso எதற்குள் வந்திருக்கின்றது. அது தனியாராக இருந்தாலும் நாங்கள்தான் வட்டாரத்திற்கு தலைவர்கள். நாங்கள் பட்டியலில் இருந்தாலும் ஒவ்வொரு வட்டாரத்திற்கும் தலைவர் நிர்ணயித்து இருக்கின்றது. மக்களின் பிரச்சினைகளோ, போதைப் பொருட்களோ இருந்தாலும் அதை யார் பேசுவது. மக்கள் பிரதிநிதி தான் பேச வேண்டும். அரச நிறுவனமாக இருந்தாலும் இந்த கூட்டத்திற்கும் உறுப்பினர்களை எடுக்க வேண்டும். கௌரவ தவிசாளர் இல்லாத பட்சத்தில் உப தவிசாளைரையாவது எடுக்க வேண்டும். நாங்களும் இதற்குள் உள்வாங்க வேண்டும். எங்களுடைய கருத்துக்களையும் நாங்கள் வெளிப்படுத்த வேண்டும்.

அடுத்த விடயம் நிர்வாகம் என்று சொல்லும் போது நிர்வாகம் இருந்திருக்கலாம். Gaffso வந்ததை பிழை என்று சொல்லவில்லை. Gaffso எங்களது ஊருக்கு உதவி செய்வது உண்மைதான். ஆனால் எங்களது கருத்துக்களும் வர வேண்டும். மக்களின் பிரச்சினையை மக்கள் பிரதிநிதிகளுக்குதான் அதிகமாக தெரியும். போதை வஸ்த்துக்களை எடுத்துக் கொண்டால் அதில் நாங்களும் ஒரு பங்கு என்று நினைக்கின்றேன். பாடசாலைகளில் போதைவஸ்த்துக்கள் வந்திருக்கின்றது. ஒவ்வொரு வட்டாரங்களிலும் போதை வஸ்த்துக்கள் வந்திருக்கின்றது. போதை வஸ்த்துக்களைப் பற்றி பல தடவை இந்த சபையில் கூறப்பட்டும் ஒரு குழு அமைக்கப்பட்டும் அந்தக் குழு அவ்வாறான வேலைகளை விழிப்புணர்வுகளோ, இந்த சபையின் ஊடாக செய்யவில்லை. நான் அறிந்து செய்யவில்லை. இதற்கு குழு அமைக்கப்பட்டிருக்கின்றது. ஒவ்வொரு இடங்களும் சென்று இது சம்மந்தமாக கதைக்க வேண்டும், விழிப்புணர்வு செய்ய வேண்டும் என்று இவ்விடத்தில் மேடைப் பேச்சு மாதிரி பேசிக் கொண்டு வெளியேறிச் செல்வது. இந்த சபையில் 4, 5 சபைகளில் சிறுவர்கள் பெண்கள் சம்மந்தமான குழு ஒன்று அமைக்க வேண்டும். அந்தக் குழுவின் ஊடாக போதைவஸ்த்து ஒன்று வருகின்றது என்றால் தாய் தகப்பனின் கவனயீன்மை. கணவர் குடும்பத்தை விட்டுச் செல்வதனால் பெண்தலமையில் அந்தக் குடும்பம் இருப்பதனால் அந்தப் பெண் குடும்பத்தை எப்படி வளர்ப்பது என்ற போர்வையில் இருக்கும் போது அந்தப் பிள்ளைகளை வேலைக்கு அனுப்புவதன் மூலமாக போதைவஸ்த்துகளை பெற்றுக் கொண்டு வருகின்றார்கள். ஆகவே இவ்வாறான போதைப்பொருள் பாவனை அதிகரிப்பது என்றால் பெற்றோர்களுக்கு ஏற்படுகின்ற விவாகரத்து நிறுத்த வேண்டும். அடுத்தது பிள்ளைகளை எவ்வாறு கல்வி வளாகத்திற்கு கொண்டு செல்வது, தற்போது பெற்றோர்கள் பிள்ளைகளை வகுப்புக்கு அங்கு இருந்து இங்கு அனுப்புகின்றார்கள். இடையில் அந்தப் பிள்ளைகள் எங்கு செல்கின்றது என்று பெற்றோர்களுக்கு தெரியுமா? அது விடயமாக ஒன்றுமே தெரியாது. இந்த சபையில் இருக்கின்ற ஒவ்வொரு ஆட்களுக்கும் விழிப்புணர்வு செய்ய வேண்டும். இந்த சபையில் எவ்வளவோ செலவு செய்யப்படுகின்றது. விழிப்புணர்வு இந்த சபையால் செய்யப்பட வேண்டும். குழு அமைத்திருக்கின்றது இந்தக் குழு கட்டாயமாக செய்திருக்க வேண்டும்.

நாங்கள் இந்த சபையில் வந்து மிசின்களுக்கு டயர் போடுவதற்கும், உதிரிப்பாகங்களுக்கு ஆமோதித்து ஒப்பம் இடுவதற்கும், குளிர்சாதனப்பெட்டி வாங்குவதற்கும் நாங்கள் வரவில்லை. நாங்கள் வந்த நோக்கம் மக்களின் பிர்சினையை தீர்க்க வேண்டும். மக்களிடம் போதைப்பொருள் வளரக்கூடாது. இதற்கு நாம் என்ன செய்ய வேண்டும். குழு அமைத்தால் குழு அமைத்த மாதிரி File இல் எல்லா குழுக்களுக்கும் ஆட்கள் எடுத்திருக்கின்றார்கள். நம்பிக்கையாளர் சபையில் இருந்து வந்திருக்கின்றது. பிரதேச செயலகத்தில் இருந்து வந்திருக்கின்றது. இந்த குழு சம்மந்தமாக பல தடவைகள் கேட்ட போது அதற்கு ஒரு உத்தியோக்தர் இருக்கின்றார் என்று எடுத்துப்பார்த்தால் அந்த உத்தியோகத்தருக்கு 11ம் மாதம் தான் 2ஆந் திகதிதான் அவர்களுக்கு Appointment Letter கொடுக்கப்பட்டிருக்கின்றது நிர்வாகத்திற்குள். எப்பயோ செய்ய வேண்டிய விடயத்தை இற்றை வரைக்கும் செய்யவில்லை. ஏன் விவாகரத்தை குறைத்திருக்கலாம்.

மனிதனுக்கு ஒரு தடவை இல்லாவிட்டாலும் இரண்டு தடவை பேசி, இரண்டு தடவை இல்லாவிட்டால் 03 தடவை பேசி அவர்களின் பிரச்சினையை எங்களாலும் முடியும். முடியும் என்றதனால்தான் இவ்விடத்தில் வந்திருக்கின்றோம். ஓரளவாவது குறைத்து பிள்ளைகளை பாதுகாத்திருக்கலாம். நமக்கும் அந்த பங்கு இருக்கின்றது என்பதை உறுதியாக சொல்கின்றேன். தயவு செய்து கௌரவ தவிசாளர் அவர்களே, இங்கு குழு அமைத்தால் வேலை செய்ய வேண்டும். உதாரணமாக சம்மாந்துறை வரலாறு புத்தகம் சம்மந்தமாக ஒரு குழு அமைத்து அந்த குழு பல்கலைக்கழக மாணவர்களை எடுத்தது இற்றை வரைக்கும் அது நடக்கும் என்று நான் நினைக்கவில்லை. இந்த சபையில் அங்கு ஒரு குழு வேண்டும், இங்கு ஒரு குழு வேண்டும் என்று குழுவுக்கு தலமை தாங்குகின்ற நோக்கத்தில்தான் இருக்கின்றார்களே தவிர அந்த குழுவை சீராக செய்து என்னன்ன தேவை வேண்டும் அந்த தேவைகளுக்கு இந்த சபையால் என்ன உதவி செய்ய வேண்டும் என்று இந்த குழுவில் இல்லை. நாங்களும் இந்த சபைக்கு வந்து அடிக்கடி சொல்வது பெண்கள் சிறுவர்கள் குழுவை அமைத்து தாருங்கள் என்று, ஒரே ஒரு நாள் குழு அமைத்து அதில் 03, 04 பேர்தான் வந்திருந்தார்கள். அதற்கு பின்னர் நான் நினைவூட்டல் கடிதம் அனுப்புங்கள் என்று சொல்லி எல்லாம் செய்து file இற்குள் வைத்திருக்கின்றார்கள். எனக்கும் தெரியாது. நான் வந்து

கேட்டதன் பிறகுதான் whatsapp இல் அனுப்பப்படுகின்றது. இது என்ன நிர்வாகம். நான் நிர்வாகத்தை குறை சொல்லவில்லை. ஆனால் அது வந்த நேரத்திலே எங்களிடம் தந்திருக்க வேண்டும். உங்களால் இயலாவிட்டால் நாங்கள் செய்திருப்போம். தயவு செய்து கௌரவ தவிசாளர் அவர்களே இதற்கு கவனம் செலுத்துமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் என்.கோவிந்தசாமி அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, போதை ஒழிப்பு சம்மந்தமாக அரசு கூட சொல்கின்றது போதைபொருள் கடத்தல்காரர்களுக்கும் பொலீஸ் இற்கும் தொடர்பு இருக்கின்றது. அதனால்தான் இதனை கட்டுப்படுத்த முடியாது என்று அரசு வெளிப்படையாக கூறுகின்றது. எங்களது பிரதேசத்தில் மதுபானம் விற்பது யார் என்று பொலீஸ் இற்கு தெரியும் அவர்கள் மாதத்திற்கு இவ்வளவு தொகை என்று அங்கு கொடுப்பார்கள். யாரும் முறைப்பாடு செய்தால் அவருக்கு தொலைபேசி அழைப்பு வரும் பிற்பகல் அல்லது காலை வருவோம் கவனமாக இருங்கள் என்று சொல்வார்கள். அப்ப எப்படி போதைப்பொருளை ஒழிப்பது. இது தான் நடைபெறுகின்றது. பாவிக்கின்றவன்தான் விட வேண்டும். மற்றும்படி இதை கட்டுப்படுத்த முடியாது. எனக்கு ஞாபகம் இருக்கின்றது பல வருடங்களுக்கு முதல் மது ஒழிப்பு சம்மந்தமாக தடை செய்தது விடுதலைப்புலி இயக்கம். முடியாமல் போய்விட்டது. அதில் தோல்வி கண்டது. மது ஒழிப்பது எமது சமூகத்தின் ஊடாக நாங்கள் எல்லோரும் கவனமாக இருக்க வேண்டும். குழு கவனமாக இருந்து சரிவராது. பாதுகாப்பு படை அதில் கவனமாக இருக்க வேண்டும். இதை பேசி பேசி நேரத்தை வீணடிக்காமல் விடுவது நல்லது என்று நான் நினைக்கின்றேன்.

அடுத்ததாக வீரமுனை வரவேற்பு கட்டடம் சம்மந்தமாக நானும் சக உறுப்பினர் என்ற படியினால் அழுத்தப் படுத்திக் கொண்டிருக்கின்றார்கள். அதை நடைமுறைப்படுத்தவில்லை. கல்முனையில் மட்டக்களப்பில் எல்லாம் பிரதேச சபைதானே அதிகாரம் வழங்கப்பட்டிருக்கின்றது என்ற குற்றச்சாட்டுக்களும் இருக்கின்றது. ஆகவே நாங்கள் எல்லோருமாக சேர்ந்து சபையில் இருக்கின்ற கௌரவ தவிசாளர் உட்பட கௌரவ உறுப்பினர்களும் சேர்ந்து இதற்கு ஒரு தீர்மானம் எடுத்து இப் பிரச்சினையை முடிவுக்கு கொண்டு வர வேண்டும் என்று பணிவான விண்ணப்பத்தினை சமர்ப்பித்து சிற்றுரையை முடிக்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் ஐ.எல்.எம்.மாஹிர் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, மையவாடிகள் சம்மந்தமாக சம்மாந்துறையில் 03 கிராமங்கள் மீள் குடியேற்றப்பட வேண்டிய கிராமங்களாக இருக்கின்றது. ஏத்தாளக்குளம், ஹிஜ்ரா புரம், மல்காம்பிட்டி இந்த 03 இடங்களிலும் இருக்கின்ற பாடசாலைகள் வேறு இடங்களில் இடம்பெயர்ந்து நான் நினைக்கின்றேன் ஏத்தாளக்குள பாடசாலையினை கல்லரிச்சலிலும், மல்காம்பிட்டி 20 வீட்டுத் திட்டத்திலும் இடம்பெயர்ந்து வந்திருக்கின்றது. ஆனால் தற்போது ஹிஜ்ரா புரத்தில் இருக்கின்ற 15 குடும்பங்கள் என்னிடம் ஒரு விண்ணப்பம் செய்திருக்கின்றார்கள் அடிப்படை வசதிகள் இல்லை அதை செய்து தாருங்கள் என்று, அது Industrial Zone ஆக மாறிக் கொண்டிருக்கின்றது ஒரு பக்கம், அடுத்த பக்கம் சனங்களும் குடியேறிக் கொண்டிருக்கின்றார்கள். எனவே நாங்கள் திட்டமிடுகின்ற நேரம் எதிர்காலத்தில் அந்த இடங்களில் இடம்பெயர்ந்தவர்கள் மீண்டும் வந்து குடியேறக்கூடிய சூழ்நிலையை கவனத்தில் கொண்டுதான் திட்டமிடுமாறு வேண்டிக் கொள்கின்றேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
இந்த கருத்தை சொன்னவுடன் நான் Google இல் பார்த்தேன். நாங்களாக முடிவு எடுக்காவிட்டால் அது நம்மை விட்டு சென்றுவிடும். Industrial Zone ஆக Declare பண்ணின மாதிரித்தான் எல்லா Rice Mill உம் வந்து கொண்டிருக்கின்றது. அதற்குரிய அமைப்பை உருவாக்குகின்ற நேரம்தான் இது பாடசாலைக்காக ஒதுக்கப்பட்டது. அந்த பிரதேசத்தில் ஒரு இன்ச் காணி இருந்தாலும் அதில் பயிர் செய்கின்ற, அல்லது வயல் செய்கின்றமாதிரித்தான் செல்கின்றது 10, 15 குடும்பத்தை தவிர அதை நான் ஏற்றுக் கொள்கின்றேன். நீங்கள் சொல்கின்ற மாதிரி Advance Planning செய்கின்ற நேரம் சாத்தியம் எது. மல்காம்பிட்டியில் ஒன்றும் செய்ய இயலாது. வட்டை மட்டத்தில் தான் ஊரும்

இருக்கின்றது. அதற்குள் எது செய்வது என்றாலும் அதை நிரப்ப வேண்டும். ஏத்தாளக் குளம் மீண்டும் போக வேண்டும். ஆனால் எல்லைப் பிரச்சினை ஒன்று இருக்கின்றது. நான் ஒரு கருத்தாகத்தான் சொன்னேன். அது முடிவு இல்லையே. இருக்கக் கூடிய அரச நிலம் நான் அறிந்தமட்டில் அவ்வளவுதான் இருக்கின்றது. நாம் கேட்டதால் உடனே வரப்போவது இல்லை. பாடசாலை இயங்கவில்லை. அந்த நிலத்திற்கு ஒருவரும் பொறுப்பு இல்லாத படியினால்தான் ஆக்கிரமிப்பு நடந்தது. எனது கருத்தை தான் சொன்னேன்.

**கௌரவ உறுப்பினர் எஸ்.எம்.எஸ்.நிலுவ்பா அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, இந்த நாட்டில் மாத்திரமல்ல உலகத்திலே போதை வஸ்த்துகள் கூடுதலாக பயன்படுத்தப்படுகின்றதாக மாணவ மாணிவிகள் மத்தியில் நடைபெறுகின்றது என்று கூடுதலான தகவல்கள் அடிப்படையில் எமது ஊர்களில் நடைபெறுகின்ற பிரத்தியோக வகுப்புக்கள் அதாவது இரவு நேரங்களில் நடைபெறுவதை முற்றுமுழுதாக தடுப்பதற்காக அல்லாமல் குறிப்பிட்ட சில காலப்பகுதிகளில் அந்த வகுப்புகளை இடைநிறுத்தி வைத்துவிட்டு வகுப்பு நடாத்தும் உரிமையாளர்களிடமும் வகுப்புக்கு செல்லும் பிள்ளைகளின் தாய்மார்களிடமும் விழிப்புணர்வு செயற்பாடுகளை நடாத்துவது எவ்வாறு இருக்கும் என்பதை இந்த சபையில் எத்தி வைக்கின்றேன். ஒவ்வொரு பாடசலை மாணவிகளும் கல்வி வந்து அவர்களின் பாடசாலையில் கற்கின்ற நேரங்களை விட பிரத்தியோக வகுப்புக்களில்தான் கூடுதலான நேரங்களை செலவளித்து கல்வியை கற்றுக் கொள்கின்றார்கள். பாடசாலை மாணவர்களுக்கு கல்வி புகட்டும் இடமாக மட்டுமல்லாமல் இரவு நேரங்களில் வகுப்புகளுக்கு செல்கின்ற மாணவிகள் இதற்கு உள்ளாகின்ற துர்பாக்கிய நிலை ஏற்படுகின்றது. அவ்வாறு பதிவு செய்யப்படாத பிரத்தியோக வகுப்புக்களில் ஒரு சம்பவம் நடந்தால் அந்த மாணவிக்கு எவ்வாறு நடவடிக்கை எடுப்பது. பிரத்தியோக வகுப்பு நடாத்தும் உரிமையாளர்களை எவ்வாறு அணுகுவது என்ற அறிவு இல்லாமல் இருக்கின்றது. அவ்வாறான வகுப்புக்கள் நடத்துபவர்களுக்கு எங்களது சபை மூலம் வெள்ளிக்கிழமை நாட்களில் ஒரு துண்டுப்பிரசுரம் பிரத்தியோக வகுப்புக்களை இரவையில் நடாத்த வேண்டாம் என்று. எல்லாரிடமும் சென்று சொல்லிக் கொண்டு இருக்க இயலாது. இவ்வாறான ஒரு செயற்பாடு செய்தால் என்ன என்பது எனது கேள்வி.

கட்டாக்காலி மாடுகளுக்கான பிரேரணை ஒன்று இந்த சபையில் கடந்த 2 வருடங்களுக்குள் முன் முன்வைத்தேன். அதற்கு சபை குறிப்பிட்ட காலத்திற்குள் நடவடிக்கை எடுத்து மாடுகளை கட்டிவிட்டு அந்த செயற்பாடுகள் நடைபெற்றது. மீண்டும் மாட்டு உரிமையாளர்கள் கண்ட மாதிரி விட்டதனால் கட்டாக்காலி மாடுகளால் கௌரவ உறுப்பினர் யூசுப் லெப்பை அவர்கள் சொன்னமாதிரி உயிர் சேதம் மட்டுமல்ல தற்போது ஒரு இளைஞன் கை உடைந்த நிலையிலும் வேலைக்கும் செல்லாமல் வீட்டிலே இருக்கின்றார். இவ்வாறான துர்ப்பாக்கிய நிலை ஏற்படுகின்றது. கட்டாக்காலி மாடுகளை கட்டுப்படுத்துவது பிரதேச சபையோ, பொலீஸ் நிலயமோ அல்லாமல் ஒவ்வொரு பொதுமகனினுடைய பொறுப்பு என்று அறிவித்தால் வீடுகளுக்குள் செல்கின்ற கட்டாக்காலி மாடுகளை அவர்கள் கட்டிப்போட்டு அவர்கள் மாட்டு உரிமையாளர்களிடம் தண்டப்பணத்தை அறவிட்டார்களாக இருந்தால் மாடுகள் கண்ட மாதிரி வீதிகளில் செல்வது தடையாக இருக்காது. இது பாரிய ஒரு பிரச்சினையாக இருக்கின்றது. தற்போது எங்களுடைய வளவுகளிலும் மாடுகள் வருகின்றது கண்ட நிண்ட மாதிரி பயிர்களில் மேய்கின்றது. நாங்கள் கண்டால் மாத்திரம் துரத்தியடிக்க வேண்டிய நிலை ஏற்படுகின்றது. இது கட்டாக்காலிகளுக்கான காலமாக இருக்கின்றதே தவிர யாரும் நடவடிக்கை எடுப்பதாக இல்லை.

மையவாடிகளை புணர் நிர்மாணம் செய்வது, மையவாடிகளுக்கான நிலங்களை எடுப்பது சம்மந்தமான பிரேரணை ஒன்று வந்தது. கடந்த 11ம் மாதம் எனது தாயாரின் மரணத்திற்கு பின் மஹல்லா மஹல்லா மையவாடியில் அடக்கம் செய்ததற்கு பின்னர் எனது சகோதரர்கள் தாயின் கப்ர் ஸ்தானத்தில் துஆ பிராத்தனையில் ஈடுபடுகின்ற சந்தர்ப்பத்தில் ஒரு கப்ர் தோன்றப்பட்ட நிலையில் புதிதாக ஒரு ஜனாசா அடக்கம் செய்யப்பட்டிருக்கின்றது என்று தெரிந்தவுடன் அதை மூடாமல் அதற்கு பக்கத்தில் ஒரு கப்ர் இனை தோன்றி அடக்கம் செய்திருக்கின்றார்கள். எனது சகோதரர்கள் சென்ற நேரத்தில் வேலை செய்தவர்கள் யாருமே இல்லை. புதிதாக ஜனாசா ஒன்று அடக்கம் செய்யப்பட்டிருக்கின்றது. ஆனால் இந்த ஜனாசாவினை மூடவில்லை. இது கடந்த டிசம்பர் 05 ஆந் திகதிக்குள் நடந்த சம்பவம்.

அப்படியான ஒரு சம்பவம் நடைபெற்றவுடன் நிர்வாகத்திடம் தொலைபேசி அழைப்பு மூலம் தொடர்பு கொண்டு கேட்ட நேரம் அவர்கள் சொன்னார்கள் கப்ர் தோன்றிய மிசின் பெட்ரி பழுதாகிவிட்டது அதனால் அதை சரியாக செய்ய இயலாத நிலை என்று கூறினார்கள். எனது சகோதரர்கள் செல்லாமல் இருந்திருந்தால். அடக்கம் செய்யப்பட்டிருந்த ஜனாசாவின் நிலை என்னவாக இருந்திருக்கும். தற்போது நமது ஊரில் மழை பெய்து கொண்டிருக்கின்றது. அவ்வாறான அவல நிலைகள் நடக்காமல் மையவாடிகளை புணர் நிர்மாணம் செய்வது மட்டுமல்லாமல் ஒரு கண்காணிப்பு கமரா பொருத்தினால் எவ்வாறு இருக்கும். மரத்தை நாட்டுகின்றோம். தண்ணீர் ஊற்றுகின்றோம், பயிர்களை வைக்கின்றோம். ஆனால் காலத்துக்கு காலம் நிழல் தரக் கூடியதாகவும் பிரயோசனம் தரக் கூடியதாகவும் இருக்கும். ஆனால் ஜனாசா என்பது மண்ணறையில் சென்று அனுபவிக்கும் வரைக்கும் இருக்க வேண்டிய விடயம். இதற்கு நாம் நிலையான சேவை ஒன்றை இந்த சபை மூலம் செய்ய வேண்டும் என்று எத்திவைக்கின்றேன்.

வில் கழகத்தை உருவாக்குவதற்கு வளத்தாப்பிட்டியில் இருக்கின்ற சந்தையினை 06 மாதத்திற்கு இலவசமாக தந்தீர்கள் அந்த சந்தையினை புனர் நிர்மாணம் செய்வதற்கு எங்களது சபை நிதியில் இருந்து 260,000.00 இற்கு கூரை அமைப்பதற்கு உதவி செய்த இந்த சபைக்கு வில் கழகம் சார்பாக நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் ஏ.எம்.எம்.றியாஸ் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, கடந்த அமர்வில் மீன் சந்தை சம்மந்தமாக பல வாதப் பிரதிவாதங்கள் நடைபெற்றது. அதை நீங்கள் நேரடியாக DIG இடம் சென்று அதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன் என்று சொன்னீர்கள். தற்போது அதன் நிலமை என்ன? அதற்குரிய நடவடிக்கை என்ன என்பதை இந்த சபையோர்கள் மூலம் அறிய விரும்புகின்றேன்.

**கௌரவ உறுப்பினர் கே.எம்.இன்பவதி அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, கடந்த 02 வருடத்திற்கு முன்பாக ஒரு முன்மொழிவு ஒன்றை வைத்திருந்தேன். எமது சபையின் பராமரிப்பில் இருக்கின்ற இந்து மயானத்தில் இறுதிச் சடங்கு செலுத்துவதற்கான ஒரு கட்டடம் ஒன்றை கேட்டு இந்த சபையிலே முன்மொழிந்தேன். எமது சபையில் நிதி இல்லாத காரணத்தினால் அது பிற்போடப்பட்டுள்ளது. இப்போது அதற்கான தருணம் வந்திருக்கின்றது. PSDG திட்டத்தின் ஊடாக அதை நடைமுறைப்படுத்த இந்த சபையின் அனுமதியை கேட்கின்றேன்.

அத்தோடு போதைப்பொருள் சம்மந்தமாக இங்கு பேசப்பட்டதற்காக நானும் சில வார்த்தைகள் பேச விரும்புகின்றேன். மிகவும் கவலையாக இருக்கின்றது. ஓரிரு நாட்களுக்கு முன் ஒரு Video பார்த்தேன். சம்மாந்துறையில் ஒரு முகவர் ஒருவர் 15 பேரை இனங்காட்டினார். போதைப் பொருள் வியாபாரம் செய்பவர்களை, அதைப் பார்த்து நான் மிகவும் மனம் வருந்தினேன். தமிழ் பிரதேசங்களில் தான் அதிகமான போதைப் பொருள் பாவனை கடந்த காலங்களில் காணப்பட்டது. தற்போது சம்மாந்துறையில் மிகவும் ஊடுறுவிக் கொண்டிருக்கின்ற போதைவஸ்து பாவனையை இவர்கள் சொல்கின்ற மாதிரி சட்டத்தாலும், எதனாலும் கட்டுப்படுத்த முடியாது. என்னைப் பொருத்தமட்டில் சம்மாந்துறையை காப்பாற்ற வேண்டும் என்றால் ஒவ்வொரு பிள்ளைகளையும் மதம் சம்மந்தமான கலாசாரம் சம்மந்தமான விழுமியங்களுக்கு உட்படுத்தினால் மாத்திரமே போதைப்பொருள் பாவனையில் இருந்து மீள கொண்டுவரலாம் என்று நினைக்கின்றேன். உண்மையிலே மதம் சம்மந்தமாக அவர்களுக்கு ஊட்டும் போது நிச்சயமாக அதில் வெற்றி காணலாம். பொலீஸ் இனாலோ எவராலும் இதை கட்டுப்படுத்த முடியாது என்பதை சொல்லிக் கொள்ள விரும்புகின்றேன்.

## தீர்மானம் - 04/58/21
எமது சபையின் பராமரிப்பின் கீழ் இருக்கின்ற மல்வத்தை இந்து மயானத்தில் இறுதி சடங்கு செலுத்துவதற்காக கட்டடம் ஒன்று அமைப்பதற்கான தீர்மானம்.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | கே.எம்.இன்பவதி |
| ஆமோதித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |

தீர்மானம் சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏகமனதாக அனுமதிக்கப்பட்டது.

**கௌரவ உறுப்பினர் ஏ.சீ.எம்.சஹீல் அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே, எமது சபையின் பராமரிப்பில் இருக்கின்ற சென்னல் கிராம நூலகம் அதைச்சுற்றி இருக்கின்ற வேலிகள் அலங்கோலமாக இருக்கின்ற காரணத்தினால் அங்கு இருக்கின்ற பயிர்களை ஆடுகள், மாடுகள் சென்று நாசம் செய்கின்றது. குறிப்பாக கௌரவ தவிசாளர் அவர்களே, உங்களுடைய முயற்சி என்பது அந்த இடத்திலே வரவேற்கத்தக்க விடயம். அந்த அடிப்படையிலே முகப்பையாவது தகரமிட்டு அடைத்துக் கொடுக்க வேண்டும் என்று சபையில் கேட்டுக் கொள்கின்றேன்.

**தீர்மானம் - 04/58/22**

சென்னல் வாசிப்பு நிலையத்தினை சுற்றி இருக்கும் வேலியின் திருத்த வேலை செய்வதற்கான தீர்மானம்.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ.சீ.எம்.சஹீல் |
| ஆமோதித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |

தீர்மானம் சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏகமனதாக அனுமதிக்கப்பட்டது.

**கௌரவ உறுப்பினர் எம்.எஸ்.சரீபா அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே, கௌரவ உறுப்பினர் அஸ்பர் அவர்கள் சொன்னமாதிரி பெண்கள் தானோ என்று விட்டு விடுகின்றிங்களோ தெரியாது. நான் பல தடவை விஷ வைத்தியர் பாதையை பற்றி சொல்லி வந்தேன். நீங்கள் நினைக்கலாம் ஏன் இந்தப் பாதை இவருக்கு முக்கியம் என்று இல்லை அது உண்மையிலே மக்களுக்கு முக்கியமான இடம். தற்போது வந்து பாருங்கள் ஆழமான குழி ஒன்று விழுந்து அதில் நான் எனது மகனை பயன்படுத்தி கல்லுகளை போட்டிருக்கின்றேன். மிகவும் பாரதூரமாக இருக்கின்றது. தற்போது மின்சாரம் இல்லாத நிலையில் அந்த தூணில் வாகனம் மோதி அந்த இளைஞன் என்ன நிலமையோ தெரியாது. உண்மையாக அந்த பாதையை பல தடவை சொல்லியும் அதைப் பற்றி கவனம் எடுத்தார்களோ தெரியாது. அத்தோடு எமது கௌரவ உறுப்பினர் ஜிப்ரி அவர்கள் சொன்ன மாதிரி பாதை ஒன்று திறக்க வேண்டும் என்று எல்லோரும் பாடுபட்டார்கள். பாதை திறந்தவுடன் பாதை திறந்தாச்சு என்று கைவிட்டது மாதிரி போயிருக்கின்றது. நான் நேரத்தோடு வடிகானில் ஏற்பட்ட பிரச்சினையில் நான் அந்தப் பாதைக்கு போகவில்லை. ஆனால் நேற்று அந்தப் பாதையில் பிள்ளைகள் மதிய நேரம், இரவு நேரம் வகுப்பு முடிந்து போகின்ற நேரத்தில் கஸ்டமாக இருக்கின்றது என்று தண்ணீர் தேங்கி நிற்கின்றது. வடிகான் என்பது பாதையின் பக்கத்தில் தேவையில்லை. பின்னுக்கு இருக்கின்ற வடிகானை திறந்தால் தண்ணீர் ஓடும். நான் கேட்பது என்னவென்றால் நீங்கள் நினைக்கலாம் பாதையை கேட்டு பாதையை திறக்கப்பட்டுள்ளது. அந்த இடத்தில் மின் கம்பம் அமைக்க வேண்டும் என்பது ஒரு அவா.

அந்தப் பாதைநேரான பாதை அல்ல. அந்தப் பாதை வளைவாக இருக்கின்றதனால் இருளாக இருக்கின்றது. தற்போதய துஸ்பிரயோகம் நிறைந்த இடமாக இருக்கின்றதால் அந்த பிரதேசம் வண்மைக்குட்படுத்தப்பட்ட பிரதேசமாகத்தான் திகழுகின்றது என்று நினைக்க வேண்டும். எல்லோரும் பெரியவர்கள், சிறியவர்கள் எல்லோரும் போதைக்கு அந்த பிரதேசத்தை பயன்படுத்துவதற்கும் விநியோகம் செய்வதற்கும் அப் பிரதேசம் இடமாக அமைந்திருக்கின்றது. அந்த இடத்தில் பாதை இருப்பது ஆபத்தான இருக்கும் என்று இரவுதான் கண் ஊடாக காணக் கிடைத்தது. நான் ஒரு மரண வீட்டிற்கு சென்று வந்த நேரம் அந்தப் பாதையால் வர இயலாது என்று தெரிந்தும் எனது கையில் இருந்த Torch light இனை அடித்தவுடன் அங்கு இருந்து பிள்ளைகள் ஓடிய விதத்தை சொல்கின்றேன். கட்டாயம் அதற்கு ஒரு மின்கம்பம் அமைத்து வெளிச்சம் ஊட்ட வேண்டும் என்றும் வீட்டிற்கு மின் விநியோகம் எடுக்கப்பட்டிருக்கின்ற அந்த தூணை அகற்றி பாதையை சரி செய்து தர வேண்டும் என்றும் மிகவும் கன்னியமாக மக்களுக்காக கேட்கின்றேன். எனக்காக இல்லை. இந்த முறையாவது அதற்கு கவனம் செலுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்வதுடன்

இன்னுமொரு விடயம் என்னவென்றால் கல்வி. ஜமாலியா வித்தியாலயத்தின் அதிபர் பெண் என்ற ரீதியில் பேசுகின்றீர்கள் என்று நானும் கேட்டுக் கொண்டு இருந்தேன். பிழை என்பது எல்லோரும் விடுவதுதான். அந்த பிழை எவ்வாறு என்று யாராவது தனியாக ஆராயவில்லை. அதற்காக பெண்கள் தானே என்ற வார்த்தையை இந்த இடத்தில் தவிர்த்துக் கொள்ள வேண்டும். ஏனென்றால் உலகத்திலே பிரதமராக முதல் பெண்மணியாக இருந்திருக்கின்றார். ஜனாதிபதியாக ஒரு பெண்மனி இருந்திருக்கின்றார். எந்த சட்டத்துறை சென்றாலும் பெண் தான் இருக்கின்றார். ஆசிரியர் கல்வி ஊட்டும் போது பெண் தான் அழகாக கல்வியை ஊட்டுகின்றார். பெண்ணுக்குத்தான் தெரியும் தன் பிள்ளைகளை. பெண் என்பவள் எப்போதும் தாய்மைக்கு சமனானவள். அந்த தாய்மையில் இருந்து வந்தவர்கள் தான் நாங்கள் அனைவரும். ஆதம் அலைஹிஸ்ஸலாம், அவ்வா அலைஹிஸ்ஸலாம்

தொடக்கம் நாங்கள் அனைவரும் உருவாக்கப்பட்டிருப்பதும் அந்த பெண்மையால்தான். பெண் தானே என்று இழிவாக பேசும் இந்த இடத்தை நீங்கள் எல்லோரும் வாபஸ் பெற வேண்டும். இதில் நான் விட்டுக் கொடுக்க மாட்டேன். பெண் தான் என்பதை விட்டுவிட வேண்டும்.

மையவாடிக்கு பெயர் சூட்டப்பட வேண்டும் என்பதில் ஆட்சேபணை இல்லை. ஆனால் தனிப்பட்டவர் பெயர் சூட்ட முடியாது. இஸ்லாமிய சட்டம். சரீயத் சட்டத்தை பார்க்கும் போது மையவாடி என்பது மரணங்களை அடக்கம் செய்வது இறைவனுக்கு சொந்தமான ஒன்று. அதை நாங்கள் பூங்கா என்றோ தனிப்பட்ட பெயர் சூட்ட வேண்டும் என்பதில்லை. நீங்கள் இதை தீர அமீர் ஒருவரிடம் விசாரித்துவிட்டுதான் தனிப்பட்ட பெயரை மையவாடிகளுக்கு சூட்ட வேண்டும். பொதுவான பெயர் சூட்டப்படும் இடங்களாக மையவாடிகள், அடக்கஸ்தலங்கள் அமைக்கப்பட வேண்டும். ஆனால் நான் தனிப்பட்ட கோபத்திற்காக இல்லை. கௌரவ உறுப்பினர் சிஹாமா சொன்னது போல பெண்கள் சிறுவர்களுக்கான குழு அமைக்கின்ற நேரம் ஆம் என்றதான் அதற்கு அழைப்பு மீண்டும் வரவில்லை. நாங்கள் சென்றாலும் சில விடயங்களை கவனத்தில் எடுத்து தீர்ப்பு வழங்கி சேர்த்திருக்கின்றீர்கள். ஆனால் இந்த விடயங்களையும் சேர்த்து பெண்களுக்க சிறுவர்களுக்கான முன்னுரிமைப்படுத்தல் என்ற ஒரு வழிகாட்டலையும் சேர்த்துக் கொள்ள வேண்டும். மீண்டும் நாங்கள் சபைக்கு வருவோமோ இல்லையோ தெரியாது. யாருக்கு மரணம் முந்தி பிந்தியோ தெரியாது. இந்த நேரத்தில் யாருடைய மனதையும் நோகடிக்காமல் தனது கதிரைக்கு ஆசப்பட வேண்டும் என்று எண்ணாமல் சமூகத்திற்காக ஆசைப்பட்டு செயற்பட வேண்டும் என்று எல்லோரின் உள்ளத்திலும் பதிய வேண்டும் என்று கேட்டு விடைபெறுகின்றேன்.

**கௌரவ உறுப்பினர் ஏ.எச்.அன்வர் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, மல் 10 யாசின் வீதி கௌரவ உறுப்பினர் அஸ்பர் அவர்களால் வேலை செய்யப்பட்டு இருக்கின்றது. அதன் பின்னர் ஒன்றும் நடைபெறவில்லை. பழைய பிரதேச சபையில் இருக்கும் போது கதைத்திருக்கின்றேன். நீங்கள் பாலம் அமைக்க வேண்டும் என்று சொன்னீர்கள்.

**கௌரவ உறுப்பினர் யூ.எல்.அஸ்பர் அவர்கள்**
கௌரவ தவிசாளர் அவர்களே, மலை எல்லாம் உடைத்து எல்லா வேலைகளும் செய்யப்பட்டது. பொருட்களுக்கு விலை கூடியதால் வேலைகள் நிற்பாட்டப்பட்டுள்ளது. 85 கோடி ரூபா திட்டங்கள் இருக்கின்றது. 28000 ரூபாவுக்கு கொள்வனவு செய்த முக்கஞ்சிக் கல் தற்போது 78000 ரூபா. 900 ரூபாவுக்கு கொள்வனவு செய்த சீமெண்ட் தற்போது 2800 ரூபா

**கௌரவ உப தவிசாளர் ஏ.அச்சி முஹம்மட் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, கௌரவ உறுப்பினர் அவர்கள் கூறினார்கள் மது சம்மந்தமாக மதுப் பாவனை முதல் இருந்தது. அது ஒரு காலத்தில் சட்டரீதியான Licence கொடுத்து அரசு சட்டரீதியற்ற முறையில் செய்வது தான் அந்த வியாபாரம். நான் நினைக்கின்றேன் எல்லோரும் சரியாக விளங்கவில்லை. போதை என்கின்ற விடயம் OL, AL படிக்கின்ற பிள்ளைகளை வைத்திருக்கின்ற பெற்றார்கள் அதிலும் குறிப்பாக ஆண் பிள்ளைகளை வைத்திருக்கின்ற பெற்றார்கள் பயப்படுகின்றது அவர்களுக்குத்தான் தெரியும். இது எப்படி பரவுகின்றது என்று இலங்கையில் மிகவும் வறுமையான நிலையில் கட்டுப்படுத்துகின்ற விடயம் ஒவ்வொரு முறையும் எத்தனையோ கோடி பெறுமதியை சொல்கின்றார்கள். 15 பேரை இனங்காட்டியிருக்கின்றார்கள்.

கௌரவ உறுப்பினர் இன்பவதி அவர்கள் கூறிய மாதிரி பள்ளிவாசல்களில் இதற்காக துஆ பிரார்த்தனையும் செய்து நோன்பும் பிடித்து பிள்ளைகளுக்கு அறிவூட்ட வேண்டும் என்ற தீர்மானத்தை பள்ளிவாசல் ஒவ்வொன்றிலும் சொல்லப்பட்டிருக்கின்றது. ஆனால் தயவு செய்து இதன் உள் தாப்ரீகத்தை விளங்கி ஒவ்வொருவரும் உள்வாங்கி யார் யாரை சந்திக்கின்றோமோ அல்லது யார் மேல் சந்தேகம் வருகின்றதோ அவர்களின் பெற்றார்களை அணுகி இப்படி பாவனையில் இருக்கின்றவர்கள் 30 வயதிற்கும் வாழ இயலாது. நமது சந்ததிகள் கண் முன் அழிவதை பார்க்கக்கூடிய சந்தர்ப்பத்தை உருவாக்கி இருக்கின்றது போதை. சாராயம் குடித்தவர்கள் 100 வயது வரைக்கும் வாழ்கின்றார்கள். இது நோய் எதிர்ப்பு சக்தியை உடனடியாக குறைத்துவிடுகின்றது. தயவு செய்து இதன் பாரதூரத்தை விளங்கி நாங்கள் எல்லோரும் ஏதோ ஒரு வகையில் மக்கள் பிரதிநிதியாக இருக்கின்றோம். யாரின் பிள்ளைகளாக இருந்தாலும் சரி சாதி மத பேதங்களுக்கு அப்பால் சென்று அதை தடுக்க வேண்டும்.

இந்த சபையை பொருத்தவரையில் அந்த வார்த்தையை ஏதோ பேசியிருக்கலாம். இலங்கையிலே பெண்களை கண்ணியப்படுத்துகின்ற சபையாக இந்த சபையை ஏற்றுக் கொள்ள வேண்டும். நாங்கள் எங்களது உள்ளத்தில் நினைத்துக் கொண்டிருப்பது மிகவும் உயர்ந்த இடத்தில். நீங்களாக உங்களை குறைத்துக் கொள்ளக் கூடாது. விவாதங்கள் வருகின்ற போது ஆண்கள்

ஆண்களுக்குள்ளும் கதைக்கின்றார்கள் தானே. உங்களை தாழ்வாக நினைக்காதீர்கள். பெண் என்றால் மிகவும் இரக்கமானவர் கௌர தவிசாளர். ஆகவே இந்த சந்தர்ப்பத்தை பிழையாக விளங்கிக் கொள்ளாதீர்கள்.

**கௌரவ உறுப்பினர் யூ.எல்.அஸ்பர் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, வெட்கம், ஞானம், பயிர்ப்பு இது பெண்களுக்கு பொருந்துமா? ஆண்களுக்கு பொருந்துமா? அந்த அமைப்பில் தான் நான் பேசினேன். கேவலப்படுத்துவதற்காக அல்ல.

**கௌரவ உறுப்பினர் எஸ்.நளீம் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, என்னுடைய வட்டாரத்தில் எமது சபையின் பராமரிப்பின் கீழ் இரண்டு பாலர் பாடசலைகள் இருக்கின்றது. பிஸ்மில்லாஹ் பாலர் பாடசாலை, பாத்திமா பாலர் பாடசாலை இந்த இரண்டு பாடசாலைகளின் ஆண்டு இறுதி விழா செய்வதற்காக சபையிடம் நிதி உதவி கோரி எழுத்து மூலம் சமர்ப்பித்திருக்கின்றார்கள். எனக்கும் ஒரு எழுத்து மூலம் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. உண்மையாக அந்த பிரதேசத்தில் இருப்பவர்கள் கஸ்டமான மக்கள் அவர்களினுடைய பங்களிப்பின் ஊடாக செய்ய முடியாத காலகட்டமாக இருக்கின்றது. இதற்கு முன்பு பல தடவைகள் நாம் எமது சபை நிதியில் இருந்து விழாக்களை கொண்டாடி இருக்கின்றோம்.

ஆனால் இன்று எமது சபையினுடைய CDO மிகவும் திட்டவட்டமாக அவர்களுக்கு கூறியிருக்கின்றார் இந்த சபையினால் எந்தவிதமான நிதியும் வழங்கப்படமாட்டாது. அதே போன்று வழமையாக இந்த நிகழ்வு எங்களது அப்துல் மஜீட் மண்டபத்திலே தான் இந்த பாடசாலைகளுக்குரிய விடுகை விழா நடைபெறுகின்றது. இந்த முறை அந்த மண்டபமும் வழங்கப்படமாட்டாது உங்களது பாடசாலைகளிலே நடாத்த வேண்டும் என்று கூறியிருக்கின்றார். கௌரவ தவிசாளர் அவர்களே, பாத்திமா பாலர் பாடசாலையிலையோ அல்லது பிஸ்மில்லா பாலர் பாடசாலையிலையோ இவ்வாறான நிகழ்வுகளை நடாத்தக் கூடிய எவ்விதமான அடிப்படை வசதிகளும் இல்லை. அவ்வாறு இருக்கும் போது எமது சபையின் பராமரிப்பின் கீழ் இருக்கின்ற பாடசாலையின் விடுகை விழாவை செய்வதற்கு ஏன் எமது பராமரிப்பின் கீழ் இருக்கின்ற மண்டபத்தை ஒதுக்கி கொடுக்க முடியாது. கௌரவ தவிசாளர் அவர்களே, CDO என்பவர் இந்த சபையினுடைய ஒரு உத்தியோகத்தர்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
உத்தியோகத்தர்களைப் பற்றி நீங்கள் பேசக்கூடாது. பிரச்சினையை சொல்லுங்கள். அதற்கு மறுமொழியை தருகின்றேன். CDO சொல்வது சபை எடுக்கின்ற தீர்மானம். நியாயமாக கேள்வியை கேளுங்கள் அதற்கு நான் பதில் தருகின்றேன். CDO இன் பிரச்சினை இல்லை. இது ஆழமான பிரச்சினை. நீங்கள் ஒன்று விளங்க வேண்டும் எல்லா காலமும் ஒரே மாதிரி நடத்த இயலாது. பாலர் பாடசாலையின் வருட விழாக்கள் இவ்வளவு காலமும் வசதிகள் இருக்கின்ற நேரம் செய்து வந்தோம். இந்த முறை தீர்மானித்தோம் பிள்ளைகளுக்கு செலவு இல்லாமல் சுருக்கமாக அந்தந்த பாடசாலைகளில் செய்வதற்கு. மண்டபம் கொடுப்பதில் பிரச்சினை இல்லை. ஆனால் அந்த மண்டபத்திற்கு அங்கு இருந்து இங்கு வர வேண்டும். அதற்கும் ஒரு செலவு. பெற்றோர்கள் நாம் எவ்வளவோ பங்களித்தாலும் பிள்ளைகளை அலங்கரிப்பதற்கு செலவளிக்கின்ற செலவு. இவைகள் எல்லாவற்றையும் உள்வாங்கி தான் எளிமையாக இந்த நாட்டில் பொருளாதார பிரச்சினை இருக்கின்றது. அதனால் எளிமையாக செய்யுங்கள் என்று சொல்லப்பட்டது. மண்டபத்தை கொடுப்பதில் பிரச்சினை இல்லை. உங்களது பேச்சுக்களில் அவதானிப்பது ஒரு விரல் நீட்டும் போது மூன்று விரல் நமது பக்கமும் நீட்டப்படுகின்றது என்பதை நீங்கள் மனதில் வைக்க வேண்டும். குறை கூறுவது இலகு. 365 நாட்களில் நாம் எத்தனை நாள் நாமாக இறங்கி ஒரு பிரச்சினைக்கு முகங்கொடுத்திருக்கின்றோம் என்றால் அதற்குரிய விடை உங்களிடமே இருக்கின்றது.

போதைப்பொருள் என்கின்ற விடயத்தில் விழிப்புணர்வு என்பது எனக்கு பிடிக்காத சொல். சர்வதேச மட்டத்தில் இருந்து Local மட்டம் வரைக்கும் எல்லா மட்டத்தில் பங்குபற்றியவர்களும் நான் நினைக்கின்றேன் இந்த சபையில் 2 பேர் தான் இருக்கலாம். கௌரவ உறுப்பினர் மாஹிர் நான் இருக்கலாம். இதில் நாங்கள் விளங்காமல் இருப்பது என்னவென்றால். இன்றைக்கு இந்த நாடு இருக்கின்ற நிலமையும் பிள்ளைகள் இருக்கின்ற நிலமைக்கும் பொறுப்பு நாங்கள் அதை உணருங்கள். நாம் ஒவ்வொருவரும் பொறுப்பு. சபை செய்ய வேண்டும் பள்ளிவாசல் செய்ய வேண்டும் அவர் செய்ய வேண்டும், இவர் செய்ய வேண்டும் என்று இல்லாமல் நீங்கள் செய்ய வேண்டும். குழு அமைத்தும் ஒன்றும் ஆகப் போவதில்லை. குழுவில் சேருகின்றவர்களும் ஒன்றும் செய்வதில்லை. ஹன்சார்ட் நிரப்புவதற்காக பேசுவதில் பிரயோசனம் இல்லை. நீங்கள் என்ன செய்திருக்கின்றீர்கள்.

உங்களது குடும்பத்தில் உங்களது பிள்ளைகளை உங்களுக்கு கட்டுப்படுத்த இயலாவிட்டால் மற்றவர்களின் பிள்ளைகளை கட்டுப்படுத்துவது எப்படி. ஒவ்வொரு குடும்பமும் குடும்பமாக இயங்குமானால் போதைப் பிரச்சினை வராது. ஏன், தற்போது குடும்பம் இல்லை. ஒரு குடும்ப வாழ்க்கையோ இல்லை. இருட்டாக இருந்த பாதைகளுக்கு மின்குமிழ் போட்டு பிள்ளைகள் எல்லோரும் வீதியில் நிற்கின்றார்கள். 12 மணிக்கும் வீட்டுக்கு செல்லாமல் இருக்கின்றார்கள். பெற்றோர்கள் தேடுவதில்லை. நாம் தான் பொறுப்பு. பொலீஸ் உம் செய்ய இயலாது. Army உம் செய்ய இயலாது, அரசாங்கமும் செய்ய இயலாது. இதை இல்லத்தாக்குவது என்றால் நாம் தான் இல்லத்தாக்க வேண்டும். நான் 14 வருடமாக சொல்லி வருகின்றேன். முதல் மஜ்லிஸ் அஸ்ஸூறா பேச்சில் சொன்னேன். தயவு செய்து மஹல்லா நிர்வாகத்தை ஒழுங்குபடுத்தி ஆர்வமுள்ள செயற்படக்கூடிய மக்கள் மதிக்கக்கூடிய அங்கத்தவர்களை மஹல்லா நிர்வாகங்கள், கோயில் நிர்வாகங்களை உள்வாங்கி உங்களது பகுதிகளை நீங்கள் நிர்வகிங்கள். வீதியில் ஒருவன் நின்றால் ஏன் நிற்கின்றீர்கள் என்று கேளுங்கள். நாம் ஒவ்வொருவரும் நமது குடும்பத்தை திருத்துவோமானால் ஊரோ திருந்தும். நான் அந்த Video வை பார்த்து சந்தோசப்பட்டேன் கேள்வி எல்லாம் கேட்கப்படுகின்றது. அடுத்த நாள் கேள்விப்பட்டேன் வெளியில் வந்துவிட்டார்கள். ஒரு நடவடிக்கையும் எடுக்கவில்லை. ஒவ்வொரு மஹல்லாவுக்குள்ளும் நமது வீதியில் யார் கஞ்சா விற்கின்றார்கள், யார் குடு விற்கின்றான், யார் பிழையான வேலை செய்கின்றார்கள் என்று நமக்கு தெரியும். நாம் பொலீஸ் திருத்த வேண்டும் என்று எதிர்பார்க்கின்றோம். பிரதேச சபை செய்ய வேண்டும் என்று எதிர்பார்க்கின்றோம்.

வீட்டிற்கு முன் குப்பை இருந்தால் அவரை அழைத்து ஏன் இந்த குப்பையை போட்டிருக்கின்றீர்கள் என்று கேட்டிருக்கின்றோமா? இல்லை. மாறாக தவிசாளர் என்ன செய்கின்றார் இதை செய்வதில்லை என்று, நான் ஜனாதிபதி முன்னிலையிலும் கண்டேன். இந்தப் பிரச்சினையை நாமாக திருத்தினால்தான். நாம்தான் பொறுப்பு. இந்த நாட்டின் பொருளாதார நிலைக்கு முழுப் பொறுப்பும் நமது தகப்பன்மார் இல்லை. அவர்கள் பைசிக்கில் ஓடி நம்மளை படிப்பித்து பட்டதாரிகளாக்கி இருக்கின்றார்கள். ஆனால் நாம் வாழ்ந்தது 5 ரூபா வருமானம் 500 ரூபா செலவு. பிள்ளைகளுக்கு வீட்டில் வாழ்க்கை இல்லை. அவன் இன்பத்தை தேடுகின்றான். ஏன் அவனுக்கு அரவணைப்பு இல்லை, அன்பு இல்லை ஒன்றுமே இல்லை. இதற்கு நாம் யாரையும் பொறுப்பு சொல்ல இயலாது. நாம் மற்றவர்களை குறை சொல்கின்றோம். ஆனால் நாம் என்ன செய்கின்றோம். நமது குடும்பங்களை நாம் முண்ணுதாரணமாக செய்துக்கு போனால் நிச்சயமாக சமூகம் முன்னேறும்.

கட்டாக்காலி மாடுகளை முதல் நாம் பிடித்தோம். தற்போதும் பிடிக்கப்போகின்றோம். இதில் பிரச்சினை என்ன யாருடைய மாடு என்று எல்லோருக்கும் தெரியும். இது யாருடைய மாடு என்று கேட்டால் தெரியாது. மாடு உரிமையாளரிடம் கேட்டாலும் யாருடைய மாடு என்று தெரியாது என்று சொல்வார்கள். சபை பிடிக்க வேண்டும், சபை தண்டப் பணம் அறவிட வேண்டும், சபை அறுக்க இயலாதே. அடுத்த கட்டம் மாடுகளை பிடித்து நீதிமன்றத்திற்கு பாரப்படுத்தினால் சரி. யதார்த்தத்தை விளங்குங்கள், நமக்கு இயலுமானதை நாம் செய்ய வேண்டும். ஆனால் இந்த கதிரையில் இருந்தால்தான் அது விளங்கும். ஏன் சில விடயங்கள் நடக்காமல் இருக்கின்றது என்று. நான் தனியே செய்ய இயலாது.

## தீர்மானம் - 04/58/23

எமது சபையினால் நடாத்தப்படும் முன்பள்ளிப் பாடசாலைகளின் வருட விடுகை பெறும் மாணவர்களுக்கான விடுகை விழாவினை அவ்வப்பாடசாலைகளில் தனித்தனியாக நடாத்தவும், குளிர்பானம், சான்றிதழ், பரிசுப் பொருள் வழங்குவதற்குமான தீர்மானம்.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | கே.எம்.இன்பவதி |

தீர்மானம் சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏகமனதாக அனுமதிக்கப்பட்டது.

**தீர்மானம் - 04/58/24**

சம்மாந்துறை பிரதேச சபையின் கீழ் உள்ள திறந்தவெளி மற்றும் இறைச்சிக் கடைகளை 2023 வருடாந்த குத்தகைக்கு வழங்குவதற்காக 03 தடவை கேள்வி கோரல் செய்த போதும், எவரும் விண்ணப்பிக்காத காரணத்தினால் ஏலத்தில் கேள்வி கோருவதற்கும், கீழ்வரும் நிபந்தனைகளின் அடிப்படையில் குத்தகைக்கு வழங்குவதற்குமான தீர்மானம்.

1. 03 மாதங்களுக்கான குத்தகை தொகையினை எமது சபைக்குரிய கடைகள் அல்லாத இறைச்சிக் கடைகள் கழிவுக் கட்டண முற்பண வைப்பாக சபைக்கு செலுத்துவதற்கும், ஜனவரி முதல் ஒவ்வொரு மாதமும் 10ஆந் திகதிக்கு முன் உரிய மாதாந்த குத்தகைப் பணத்தினை செலுத்துவதற்கும், ஒக்டோபர் மாதம் முதல் வைப்பாக வைக்கப்பட்ட வைப்புப் பணத்தினை கழிப்பதற்குமான தீர்மானம்.

2. எமது சபைக்கு சொந்தமான இறைச்சிக் கடைகளுக்கு 03 மாத கடைக்குரிய வைப்பாக முற்பணம் சபைக்குச் செலுத்துவதற்கும், ஜனவரி முதல் ஒவ்வொரு மாதமும் 10ஆந் திகதிக்கு முன் உரிய மாதாந்த குத்தகைப் பணத்தினை செலுத்துவதற்கும், ஒக்டோபர் மாதம் முதல் வைப்பாக வைக்கப்பட்ட வைப்புப் பணத்தினை கழிப்பதற்குமான தீர்மானம்.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | எம்.ரீ.பௌசுள்ளாஹ் |

தீர்மானம் சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏகமனதாக அனுமதிக்கப்பட்டது.

**தீர்மானம் - 04/58/25**

சம்மாந்துறை பிரதேச சபையின் கீழ் உள்ள திறந்தவெளி பொதுச்சந்தையினை 2023 ஆம் ஆண்டு வருடாந்த குத்தகைக்கு வழங்குவதற்காக 03 தடவைகள் கேள்வி கோரல் செய்த போதும் எவரும் விண்ணப்பிக்காததனால் கடந்த 2018 – 2022 ஆண்டுகளுக்கான 05 வருடத்தின் குத்தகை தொகையின் சராசரி தொகையினை கணித்து அதற்கமைய உள்ளூராட்சி ஆணையாளரிடம் அனுமதி பெற்று கேள்வி கோருவதற்கான தீர்மானம்.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | என்.கோவிந்தசாமி |

தீர்மானம் சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏகமனதாக அனுமதிக்கப்பட்டது.

**தீர்மானம் - 04/58/26**

கல்லரிச்சல் 2ம் பிரிவில் S வாய்க்கால் / S 29 வாய்க்கால் மண், குப்பைகள் நிரம்பி இருப்பதனால் டெங்கு, மலேரியா போன்ற நோய்கள் பரவுகின்ற அச்சம் காரணமாக அதனை துப்பரவு செய்வதற்கும், வேலை செய்யும் கணரக வாகனத்திற்கு எரிபொருளும், சாரதிக்கு தேவையான உணவும் நீர்ப்பாசன திணைக்களத்தின் மதிப்பீட்டின் அடிப்படையில் சபை நிதியிலிருந்து வழங்குவதற்கான தீர்மானம்.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | யூ.எல்.அஸ்பர் |
| ஆமோதித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |

தீர்மானம் சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏகமனதாக அனுமதிக்கப்பட்டது.

**தீர்மானம் - 04/58/27**

LDSP நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் பின்வரும் வேலைகளை செய்வதற்கான தீர்மானம்.

1. Improving of existing Compost Yard and Purchasing packing & Pelletizing machines with necessary equipment for Organic fertilizer (Solid) form (LDSP Project PT 2)

பிரேரித்தவர் : கௌரவ தவிசாளர் ஏ.எம்.முஹம்மட் நௌசாட்
ஆமோதித்தவர் : கௌரவ உறுப்பினர் என்.கோவிந்தசாமி

தீர்மானம் சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏகமனதாக அனுமதிக்கப்பட்டது.

**கௌரவ உறுப்பினர் கே.குலமணி அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, வளத்தாப்பிட்டியில் வில் கழகத்திற்காக அந்த கட்டடத்திற்காக தாழ்வாரம் அமைப்பது தொடர்பாக தீர்மானம் எடுக்பட்டதற்கு நானும் எனது நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன். கடந்த சபையில் சக்தி வீதி கல்வெட் அமைப்பதற்கான கோரிக்கையினை முன்வைத்திருந்தேன். அதற்குரிய முடிவுகள் இதுவரையும் எடுக்கப்படவில்லை. இன்றய பொருளாதார நிலையினை கருத்திற் கொண்டு எனக்கும் விளங்கும். இருந்தும் அதை இன்னும் செயற்பாட்டுக்கு கொண்டுவரவில்லை என்று கூறிக் கொள்கின்றேன்.

மல்லிகை தீவு இந்த மயானத்திலும் கொட்டகை ஒன்று கேட்டிருந்தேன். அதற்குரிய முடிவையும் எடுக்க வேண்டும். ஏனென்றால் நேற்றய முன் தினம் மல்லிகை தீவில் மரண வீடு ஒன்று ஏற்பட்டது. கொண்டு வந்த சடலத்தை வெளியில் வைக்கக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டது. ஏனென்றால்

கல்முனையில் குடியிருக்கின்றார்கள் பிறப்பிடம் இங்கு என்பதால் இங்கு கொண்டுவர வேண்டும் என்பதற்காகவும் கொண்டு வந்தார்கள். மழையால் ஒன்றுமே செய்ய இயலாத சூழ்நிலையில் அந்த இடத்தில் ஒரு கொட்டகை அடித்துதான் வைத்தார்கள். இன்றய சூழ்நிலைக்கு தேவைப்பாடான ஒன்றாக இருக்கின்றது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
மல்லிகைதீவு சனசமூக நிலையங்களில் சில வேளைகளில் பணம் இருக்கலாம். அந்த சனசமூக நிலையம் நடைபெறாமல் இருக்கின்றது. அதை பார்ப்போம்.

**கௌரவ உறுப்பினர் கே.குலமணி அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் மலையோடு சூழ்ந்த நிலப்பரப்பு இருக்கின்றது. அதனால் அங்கு காடு பிடித்த மாதிரி இருக்கின்றது. அதை எரித்து விட்டாலும் தண்ணீர் தேங்கி நிற்கக்கூடிய இடங்கள் காணப்படுகின்றது. பள்ளமாக இருக்கின்ற இடம் மிகவும் தொம்பலாக நிலையில் இருக்கின்றது. கடந்த வருடங்களுக்கு முதல் டிசம்பர் மாதத்தில் பாடசாலைகள் நடைபெறுவதில்லை. அந்த நேரம் அது விளங்கவில்லை. தற்போது மழை காரணமாக பிள்ளைகள் போக இயலாத சூழ்நிலை காணப்படுகின்றது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
அதை ZDE இன் கவனத்திற்கு கொண்டு வருவோம்.

**கௌரவ உறுப்பினர் ஏ.எம்.எம்.றியாஸ் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, மீன் வியாபாரம் சம்மந்தமாக விளக்கம் கேட்டிருந்தேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
மீன் சம்மந்தமாக நான் SSP இடம் சென்று DIG ஐயும் வைத்து பேசி உடனடியாக அவர் உத்தரவு கொடுத்தார். ஒரு நாள் நடவடிக்கை எடுத்தார்கள். மீண்டும் விற்பனை செய்கின்றார்கள். DIG என்னிடம் சொன்னார் எந்த ஊரிலும் வியாபாரிகள் வீதிக்கு வராவிட்டால் மக்கள் வாங்குகின்றார்கள் இல்லை. எங்களுக்கு அது பிரச்சினை இல்லை. விபத்துக்கள் நடந்தால் சபைக்குதான் பிரச்சினை வரும் என்று. அவர் உடனே நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அறிவுறுத்தல் கொடுத்தார். ஆனால் அது நடைபெறவில்லை.

I.L.M.மாஹிர்
தவிசாளர்
சம்மாந்துறை பிரதேச சபை

Tel No : 067 2260178
Fax : 067 2260178
E.mail : strps2009@yahoo.com

கௌரவ தவிசாளர்,
கௌரவ உப தவிசாளர் / கௌரவ உறுப்பினர்
சம்மாந்துறை பிரதேச சபை.

**கூட்டறிக்கை அனுப்புதல்**

கடந்த 2022.12.20 ஆந் திகதி இடம் பெற்ற எமது 04வது சபையின் 58வது அமர்வின் கூட்டறிக்கை இத்துடன் இணைத்து அனுப்பி வைக்கப்படுகின்றது. இக் கூட்டறிக்கையில் ஏதாவது திருத்தங்கள் இருக்குமாயின் எதிர்வரும் 2023. ஆந் திகதிக்கு முன்னர் எழுத்து மூலம் சமர்ப்பிக்குமாறு கௌரவ தவிசாளரின் கட்டளைக்கமைய கேட்டுக் கொள்கின்றேன்.

செயலாளர்
சம்மாந்துறை பிரதேச சபை